REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 ஏப்ரல் 21 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 93 | April 21,Wednesday, 2021 | 28பக்கங்கள் | 30/-

ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்தை

தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்துகிறாரா பேராயர்?

நுவரெலியா தினகரன் நிருபர்

அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதென மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை குறிப்பிட்டுள்ள கருத்தை 06

'கிராமத்துடன் கலந்துரையாடல்'

மட்டக்களப்புக்கு மே மாதம் விஜயம் செய்கிறார் ஜனாதிபதி

மட்டக்களப்பு விசேட நிருபர்

கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்துக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் மே மாதம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது மட்டக்களப்பு மக்களின் பிரச்சினைகளை நேரில் சென்று கேட்டறிந்து அதற்கான 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் இன்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தி

நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு ஏற்பாடு

லோரன்ஸ் செல்வநாயகம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கு 02 வருடங்கள் பூர்த்தியடைவதையிட்டு இன்று புதன்கிழமை நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 06

மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு விவகாரம்:

16 சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட மாஅதிபர் குற்றப் பத்திரிகை

லோரன்ஸ் செல்வநாயகம்

மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு விவகாரம் தொடர்பில் நவ்பர் மௌலவி உள்ளிட்ட சந்தேக நபர்கள் 16 பேருக்கு எதிராக சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா கேகாலை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

மாவனெல்லை மற்றும் சில பிரதேசங்களில் உள்ள புத்தர் சிலைகளை சேதப்படுத்தி மக்கள் மத்தியில் மோதல்களை உருவாக்குவதற்கு சூழ்ச்சிகளை மேற்கொண்டமை, 06

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தின் மூலமாக

அடுத்த ஐந்து ஆண்டுகளில் 15.பில். அமெ. டொலர் முதலீடு

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தின் ஊடாக எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் 15 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நிய முதலீடுகளாக இலங்கைக்கு வரும். இதனால் நாடு கடன்பொறியிலிருந்து மீளும். புதிய தொழில்வாய்ப்புகள் உருவாகும் என்பதுடன், நாட்டின் பொருளாதாரமும் ஸ்திரமடையும். அதனை தடுக்கும் குறுகிய அரசியல் நோக்கங்களுடன் எதிர்க்கட்சியினர் கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுச் சட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வெளிநாட்டு செலாவணி சட்டம் கீழான 5 ஒழுங்கு விதிகள் மற்றும் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

அந்நிய செலாவணி தொடர்பில் நாடு பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளதென்பதை நாம் விரும்பியோ 06

நாடு விரைவில் கடன் சுமையிலிருந்து விடுபடும்

கொரோனா பரவல் தீவிரம்; மே தின கூட்டங்களுக்கு அனுமதி இல்லை

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவும் எச்சரிக்கை சூழ்நிலை நிலவுகின்ற காரணத்தால் இம்முறை மேதினக் கூட்டங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்குவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய 06

துறைமுக நகர் சட்டமூலத்துக்கான சவால்

உயர் நீதிமன்றில் சமர்ப்பித்த மனுக்கள் சபாநாயகரிடம்

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுக்கான சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 17 மனுக்களின் பிரதிகள் தனக்கு கிடைத்திருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா 06

இணையதளம் மூலம் பொய்ப் பிரசாரம்;

புதிய சட்டம் தயாரிப்புக்கு அமைச்சரவை அனுமதி

- அமைச்சர் கெஹெலிய

லோரன்ஸ் செல்வநாயகம்

இணையத்தளத்தின் மூலம்பொய்ப் பிரச்சாரங்கள் மற்றும் மக்களை திசை திருப்பும் செயற்பாடுகளையும் மேற்கொள்வோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் சட்டமூலத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 08 சம்பவங்களின் ஆவணங்கள் சட்ட மாஅதிபருக்கு கையளிப்பு

- பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர

லோரன்ஸ் செல்வநாயகம்

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் 8 சம்பவங்கள் சம்பந்தமான ஆவணங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவை இறுதி நடவடிக்கைகளுக்காக சட்ட மாஅதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் மாவனெல்லை புத்தர்சிலை உடைப்பு சம்பவம் தொடர்பிலான நபர்களுக்கெதிராக 06

வீதி விபத்துக்களால்

07 நாட்களில் 69 பேர் பலி

அவதானமாக இருக்க பொலிஸ் அறிவுரை

சுப்பிரமணியம் நிசாந்தன்

நாடு முழுவதும் 07 நாட்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்கள் காரணமாக 69 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 06

விபத்தில் 04 பேர் காயம்

விஜயதாச ராஜபக்ஷவின் மகன் நேற்று கைது

பிணையில் விடுதலை

பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷவின் மகன் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் இரவு இராஜகிரிய பகுதியில் விபத்தொன்றை ஏற்படுத்தி நால்வரை காயங்களுக்கு உள்ளாக்கிய 06

இலங்கை படகொன்றிலிருந்து 340 Kg ஹெரோயின் பறிமுதல்

1,700 கோடி இந்திய ரூபா என மதிப்பீடு

இந்திய கொச்சின் கடற்பரப்பில் சம்பவம்

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் ஐந்து இலங்கையர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். கொச்சின் கடற்பரப்பில், இலங்கை படகொன்றிலிருந்து சுமார் 340 கிலோ ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பாக ஐந்து இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் 06

நுண்கடன் திட்டத்தினால் வடக்கில் பலர் பாதிப்பு

நிவாரணம் வழங்க சஜித் கோரிக்கை

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

நுண்கடன் திட்டத்தினால் வடக்கில் அதிகமானவர்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். நாடு முழுவதும் நுண்கடன் திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க கடந்த அரசாங்கம் 06

கொவிட் 19 தடுப்பூசி 02 ஆவது டோஸ்

மே மாதம் முதல் வாரம் தொடக்கம் வழங்கப்படும்

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி தெரிவிப்பு

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

மே மாதம் முதல் வாரத்திலிருந்து கொரோனா தொற்றுக்கு எதிரான தடுப்பூசி அஸ்ட்ரா செனெக்காவின் இரண்டாவது டோஸ் வழங்கப்படுமென 06

11 இஸ்லாமிய அமைப்புகள் தடை

சட்டம் ஒழுங்கு செயற்பாடுகளில் அரசாங்கம் தலையீடு செய்யாது

ஷம்ஸ் பாஹிம்

சட்டம் ஒழுங்கு செயற்பாடுகளில் அரசாங்கம் தலையீடு செய்யாது. ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாகவே சில அமைப்புகளை தடைசெய்ய நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. 06

விக்கல் வீராச்சாமி

ஈஸ்டர் தாக்குதல் நடந்து ரெண்டு வருஷமாச்சுது, இன்னும் எங்களால சரியான ஆட்களை பிடிக்க முடியேல்ல....

இந்த அரசு ஆட்சிக்கு வந்து அடுத்த நாளே பிடிச்சிருக்கும், அரசியல் தலையீடுகள் பல குறுக்கால நிக்குது போலக் கிடக்குது...!!!

சர்வதேச செய்திகள்

நாசாவின் ஹெலி செவ்வாயில் வெற்றிகரமாக பறந்து சாதனை

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா, இன்ஜினியுட்டி என்ற சிறிய ஹெலிகொப்டரை செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக பறக்கவிட்டுள்ளது.

இந்த ஆளில்லா விமானம் ஒரு நிமிடத்திற்கு குறைவான நேரம் வானில் பறந்ததை அடுத்து, வேற்றுக் கிரகம் ஒன்றில் இயக்கப்பட்ட முதல் விமானம் என வரலாறு படைத்தது.

சுமார் 1.8 கிலோகிராம் எடையுள்ள அந்த ஹெலி, சுமார் 3 மீற்றர் உயரத்திற்குப் பறந்தது. அது சுழன்று, 39.1 வினாடிகளுக்குப் பின் தரையிறங்கியது.

அதன் மூலம் எடுக்கப்பட்ட தக வல்களும் படங்களும் 289 மில்லியன் கிலோமீற்றர் கடந்து, சுமார் மூன்றரை மணி நேரத்திற்குப் பின் பூமியில் உள்ள நாசா கட்டுப்பாட்டகத்திற்கு கிடைத்தது.

அந்த ஹெலி பயணத்திற்காகக், கடந்த 6 ஆண்டுகளாகத் திட்டமிடப் பட்டது. அதன் வெற்றி, முதல் விமானத்தை உருவாக்கிப் பறக்கச் செய்த ரைட் சகோதரர்களின் தருணத்திற்குச் சமம் என்று கூறப்படுகிறது.

1903ஆம் ஆண்டில் அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலத்தில் ரைட் சகோதரர்கள் பூமியில் முதல் விமானத்தை இயக்கினர்.

இன்ஜினியுட்டி ஹெலிகொப்டரின் கீழ் ஒரு கறுப்பு வெள்ளை கெமரா பொருத்தப்பட்டுள்ளது. இந்த கெமரா வழிகாட்டும் பயன்பாட்டுக்காக பொருத்தப்பட்டது. இந்த கெமராவிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு படம் நாசாவுக்குக் கிடைத்துள்ளது. அப்படம் இன்ஜினியுட்டியின் நிழலைக் காட்டுகிறது.

இன்ஜினியுட்டி கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் பெர்செவெரன்ஸ் ரோவரின் உதவியுடன் செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது செவ்வாய் கிரகத்தின் ஜெசெரோ பள்ளத்தாக்கு பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் தரையிறங்கியது.

காண்டாமிருக வேட்டைக்காரர் யானையிடம் மிதிவாங்கி பலி

தென்னாபிரிக்காவின் குருகர் தேசியப் பூங்காவில் காண்டாமிருகத்தை வேட்டையாட வந்ததாக நம்பப்படும் ஆடவரை, யானைகள் மிதித்துக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தன்று அதிகாரிகள் வழக்கமான காவலில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, தப்பியோட முயன்ற மூவர் யானைக் கூட்டத்திடம் சிக்கிக்கொண்டனர்.

பின்னர், மோசமாக மிதி வாங்கிய ஆடவர் ஒருவரை அதிகாரிகள் கண்டனர். அந்த ஆடவர் காயங்களால் உயிரிழந்தார் என்று தென்னாபிரிக்க தேசிய பூங்காக் கழகத்தின் பேச்சாளர் கூறினார்.

மற்றொரு ஆடவரும் தாக்கப்பட்டார். ஆனால், அவர் தப்பிவிட்டார். மூன்றாவது நபர் பிடிபட்டார். அங்கு அதிகாரிகள் ஒரு துப்பாக்கியையும், கோடாரியையும் கண்டெடுத்தனர்.

வேட்டைக்காரர்கள் காண்டாமிருகங்களைச் சுட்டு அவற்றின் கொம்புகளை வெட்டி எடுத்துக்கொள்வது வழக்கமாக நிகழும் ஒன்று. அவற்றுக்கான தேவை ஆசியாவில் மிகவும் அதிகம்.

அவை பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன. உலகின் சுமார் 80 வீதமான காண்டாமிருகங்கள் தென்னாபிரிக்காவில் உள்ளன.

குறிப்பாக, குருகரில் அவை அதிகம் கொல்லப்படுகின்றன. எனினும், கடந்த 6 ஆண்டுகளாக காண்டாமிருகங்கள் கொல்லப்படுவது குறைந்துள்ளது.

உலக வெப்பமடைதல்: ஐ.நா கடும் எச்சரிக்கை

உலக வெப்பத்தைக் குறைப்பதில் காலம் கடந்து கொண்டிருப்பதாக ஐக்கிய நாட்டுகள் சபை தனது அறிக்கை ஒன்றில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலக வெப்பத்தைக் குறைக்கும் திட்டங்களைச் "செயல்படுத்தும் ஆண்டாக" இந்த ஆண்டு இருப்பது கட்டாயம் என்று, ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலாளர் அன்டோணியோ குட்டரெஸ் வலியுறுத்தினார்.

உலக வெப்பமயமாதல் குறித்த நிறுவனத்தின் அறிக்கை, அச்சமூட்டுகிறது என்று அவர் வர்ணித்தார். வெற்றியா? தோல்வியா? என்பதைத் தீர்மானிக்கும் ஆண்டு இது வென்றும் அவர் கூறினார்.

இயற்கை மீது போர் தொடுக்கும் தற்கொலைத்தனமான போக்கிலிருந்து திசைமாறும் சாத்தியம் உள்ளது. அதை, இந்த ஆண்டு தவறவிடுவது மாபெரும் தவறாக முடியும் என்றார் குட்டரெஸ்.

அமெரிக்கா, 2030ஆம் ஆண்டுக்குள் தனது வெப்பவாயு வெளியீட்டைக் குறைந்தது பாதியாகக் குறைக்க, உறுதி கொள்ள வேண்டுமென்று தாம் விரும்புவதாக அவர் கூறினார்.

அவ்வாறு செய்தால், வெப்பவாயுக்களை அதிகம் வெளியிடும் மற்ற நாடுகளும் அதேபோல் செய்ய முன்வரும் என்றார் அவர்.

கியூபாவில் காஸ்ட்ரோ அற்ற புதிய தலைவர்

ராவுல் காஸ்ட்ரோவுக்கு பதில் கியூபா கம்யுனிஸ்ட் கட்சியின் அடுத்த முதன்மை செயலாளராக மிகுவேல் டயஸ் கனேல் நியமிக்கப்படவுள்ளார்.

மிகுவேல் டயஸ் 2018 ஆம் ஆண்டு காஸ்ட்ரோவுக்கு பதில் கியூப ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட நிலையில், அதிக செல்வாக்கு மிக்க கட்சித் தலைமை பொறுப்புக்கு நியமிக்கப்படவுள்ளார்.

இதன்படி 1959 ஆம் ஆண்டு கியூப புரட்சிக்கு பின்னர் பிடல் அல்லது ராவுல் காஸ்ட்ரோ தவிர வேறு ஒருவர் முதல் முறை கியூபாவின் தலைவராக நியமிக்கப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

காஸ்ட்ரோவுக்கு விசுவாசமானவராகவும் அவரின் பொருளாதார வடிவத்தை ஆதரிப்பவராகவும் டயஸ் கனேல் பார்க்கப்படுகிறார்.

தமது தலைமை பொறுப்பை இளம் தலைமுறைக்கு வழங்கும் அறிவிப்பை ராவுல் காஸ்ட்ரோ கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தார். 60 வயதான டயஸ் கனேல், ராவுலை விடவும் 30 ஆண்டுகள் இளையவராவார்.

89 வயதான ராவுல் காலஞ்சென்ற தனது மூத்த சகோதரர் பிடல் காஸ்ட்ரோவிடம் இருந்து பதவியை ஏற்று 2011 தொடக்கம் அந்த பதவியை வகித்து வந்தார்.

பிரான்ஸ் தூதுவரை வெளியேற்ற பாக். பாராளுமன்றத்தில் விவாதம்

இஸ்லாமியவாதிகளின் பிரான்ஸ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தொடர்ந்து பிரான்ஸ் தூதுவரை வெளியேற்றுவது தொடர்பில் பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் நேற்று விவாதம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

முஹமது நபியை அவமதிக்கும் வகையிலான கேலிச்சித்தரத்தை பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோன் தற்காத்து பேசியதைத் தொடர்ந்தே பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன.

இந்நிலையில் பாகிஸ்தான் தூதுவரை நாட்டை விட்டு வெளியேற்றினால் அதற்கான விளைவுகளை சந்திக்க வேண்டி ஏற்படும் என்று பிரதமர் இம்ரான் கான் கடந்த திங்கட்கிழமை தொலைக்காட்சியில் உரையாற்றும்போது எச்சரித்தார். பாகிஸ்தான் ஏற்றுமதிகளில் பாதி அளவானது ஐரோப்பிய ஒன்றியத்திற்கே விற்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் தூதுவரை வெளியேற்றுவது பற்றி பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தும் அறிப்பை அடுத்து, பிரான்ஸ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நாடு முழுவது கைவிடுவதற்கு தாரிக்கி லப்பைக் இஸ்லாம் கட்சி உறுதி அளித்துள்ளது.

எனினும் தமது ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று அந்தக் கட்சி ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளது. இந்த இஸ்லாமியவாத கட்சிக்கு பாகிஸ்தான் அண்மையில் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலிருந்து ஹொங்கொங் வந்த 49 பயணிகளுக்கு தொற்று

புதுடில்லியில் இருந்து ஹொங்கொங் சென்ற விமானத்தில் இருந்தவர்களில், குறைந்தது 49 பயணிகளிடம் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஹொங்கொங் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வைரஸ் தொற்று உறுதியான அனைவரும், இம்மாதம் நாலாம் திகதி இந்தியாவைச் சேர்ந்த விஸ்தாரா நிறுவனத்தின் விமானத்தில் ஹொங்கொங் சென்றவர்கள்.

ஹொங்கொங்கில் அன்றாடம் பதிவாகும் வைரஸ் தொற்றுச் சம்பவங்களின் எண்ணிக்கை, விமானப் பயணிகளிடையே உறுதியான எண்ணிக்கையைக் காட்டிலும் குறைவு. எனவே, 49 என்பது ஹொங்கொங்கிற்குக் கணிசமான எண்ணிக்கை என்பதை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். சம்பவத்தில் தொடர்புடைய விஸ்தாரா விமானத்தில், 188 பேர் வரை பயணம் செய்யமுடியும். ஆனால், அதில் எத்தனை பேர் பயணம் செய்தனர் எனும் விபரத்தை ஹொங்கொங் தெரிவிக்கவில்லை.

இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் இருந்துவரும் பயணிகள் விமானங்களுக்கு, ஹொங்கொங், கடந்த திங்கட்கிழமை தொடக்கம் 2 வாரத் தடை விதிப்பதாக அறிவித்தது.

இந்தியாவில் கொரோனா தொற்று பரவல் தீவிரம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகின் 80 வீத நாடுகளுக்கு அமெரிக்கா பயண அறிவுறுத்தல்

கொரோனா பெருந்தொற்று அச்சுறுத்தல் காரணமாக உலகெங்கும் 80 வீதமான நாடுகளுக்கு பயணம் செய்வதை தவிர்ப்பதற்கு அமெரிக்க மக்களை அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

பயண வழிகாட்டல் தொடர்பில் அந்தத் திணைக்களம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், பெரும் தொற்று தொடர்வதால் பயணிகள் முன்னெப்போதும் சந்தித்திராத அச்சுறுத்தலை எதிர்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

200 நாடுகளில் 34 நாடுகளுக்கு செல்ல வேண்டாம் என்று அமெரிக்கா தற்போது எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா தொற்றினால் தற்போது உலகெங்கும் மூன்று மில்லியனுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதோடு அவர்களில் அரை மில்லியனுக்கும் அதிகமானவர்கள் அமெரிக்கராவர்.

உலகெங்கும் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டபோதும் உலகில் நோய்த்தொற்று வேகம் அதிகரித்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. இந்நிலையில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்ட வழிகாட்டலில் கொரோனா தொற்று அச்சுறுத்தல் குறைந்த நாடுகள் பட்டியலில் மகாவு, தாய்வான் மற்றும் நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகள் மாத்திரமே உள்ளன.

பேஸ்புக் நிறுவனத்தின் ஓடியோ அம்சங்கள் விரைவில் வெளியீடு

அடுத்த சில மாதங்களில் ஓடியோ அம்சங்களை அறிமுகம் செய்யும் அறிவிப்பை பேஸ்புக் வெளியிட்டுள்ளது.

இதில் பிரபல ஓடியோ உரையாடல் செயலியான கிளப்ஹவுஸ் வடிவத்தில் நேரடி உரையாடலில் பங்கேற்பதற்கு மற்றும் கேட்பதற்கான நேரடி ஓடியோ அறைகள் என்ற அம்சமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பெருந்தொற்று காலத்தில் ஓடியோ மாத்திரமான வலைப்பின்னல்களின் பிரபலம் அதிகரித்துள்ளது.

இந்நிலையிலேயே பேஸ்புக்கும் இந்த அம்சங்களை அறிமுகம் செய்யவுள்ளது. இந்த புதிய வடிவங்களில் பயனர்களுக்கு குறுகிய ஓடியோ கிளிப்புகளை உருவாக்கவும் பகிரவும் வசதி கொண்ட சௌன்ட்பிட்ஸ் அம்சமும் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் சிறிய எண்ணிக்கையான கிரியேட்டர்ஸ்களுக்கு மாத்திரமே வழங்கப்படும் இந்த புதிய அம்சங்கள் அடுத்த சில மாதங்களில் அறிமுகப்படுத்தப்படும் என்று பேஸ்புக் அறிவித்துள்ளது.

கிரியேட்டர்ஸ் பணம் சம்பாதிக்கும் வகையில் தங்களது படைப்பு இருக்கும் என்றும் பேஸ்புக் கூறியுள்ளது.

அதேநேரத்தில், ஓடியோ தளத்தில் குதித்துள்ள பேஸ்புக் நிறுவனத்துக்கு அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மற்ற நிறுவனங்களின் திட்டங்களை பேஸ்புக் நிறுவனம் திருடுவதாகவும் குற்றம்சாட்டியுள்ளனர்.

வனுவாட்டு: கரைசேர்ந்த சடலத்தில் கொரோனா

தீவை விட்டு வெளியேற தடை

பசிபிக் தீவு நாடான வனுவாட்டுவில் கரையொதுங்கிய சடலத்தில் கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அதன் பிரதான தீவில் இருந்து வெளிப் பயணங்களுக்கு மூன்று நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டு மாலுமி ஒருவரின் சடலம் வனுவாட்டு கடற்கரையில் இருந்து கடந்த ஏப்ரல் 11 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. அவரது கப்பல், அதற்கு ஒரு நாள் முன்னதாக அந்தத் தீவுகளின் மிகப்பெரிய நகரான போர்ட் விலாவிலிருந்து புறப்பட்டிருந்தது.

அந்த ஆடவர் எங்கு, எவ்வாறு உயிரிழந்தார் என்பதும் அவரது சடலம் கடலில் விழுந்தது எப்படி என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. 300,000 பேர் வசிக்கும் தொலைதூர வனுவாட்டு தீவுகளில் வைரஸ் பரவல் ஏற்படாமல் இருக்க, நடவடிக்கை எடுத்து வருவதாக அரசாங்கம் தெரிவித்தது.

இதுவரை அந்த தீவுகளில் மூன்று கொரோனா தொற்று சம்பவங்களே பதிவாகியுள்ளன. இதன் முதல் கொரோனா தொற்று சம்பவம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பதிவானதோடு கடந்த மார்ச்சில் மேலும் இருவர் நோய்த் தொற்றுக்கு உள்ளாகி இருந்தனர்.

நியூஸி. விமானநிலைய ஊழியருக்கு கொரோனா

நியூஸிலாந்தின் ஒக்லாந்து விமான நிலையத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்குக் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக, அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு வருடத்திற்குப் பின்னர் அவுஸ்திரேலியாவுக்கும் நியூஸிலாந்துக்கும் இடையே இருவழிப் பயண ஏற்பாடு கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த நிலையிலேயே இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. அந்த ஊழியர், ஏற்கனவே முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்.

வைரஸ் பரவல் உள்ள நாடுகளிலிருந்து வரும் விமானங்களைச் சுத்திகரிக்கும் பணியில் அவர் ஈடுபட்டிருந்தார் என, நியூஸிலாந்துப் பிரதமர் ஜசிண்டா ஆர்டன் தெரிவித்தார்.

வழக்கமாகச் செய்யப்படும் பரிசோதனையில், அவருக்கு வைரஸ் தொற்று உறுதியானது.

இதற்கு முன்னதாக, இம்மாதம் 12ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு வைரஸ் தொற்று இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அவரது தொடர்புத் தடங்களைக் கண்டறியும் பணிகள் தொடர்வதாக ஆர்டன் கூறினார். இரு நாடுகளுக்கும் இடையிலான இருவழிப் பயண ஏற்பாட்டை நிறுத்துவது குறித்து அவர் ஏதும் கருத்துரைக்கவில்லை.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 ஏப்ரல் 21 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

19 முதல் 24 வரை

சுபஹ்	04.44
லுஹர்	12.11
அஸர்	03.21
மஃரிப்	06.19
இஷா	07.30

இன்றைய சுபதினம்

பிலவ வருடம் சித்திரை 8

ராகுகாலம் : பகல் : 12.00 - 01.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: நவமி

துறைமுக அதிகார சபை சட்டம்
நிறைவேற்றுவது தொடர்பில் உச்சநீதிமன்றே முடிவு செய்யும்

அமைச்சர் கெஹெலிய தெரிவிப்பு

ஷம்ஸ் பாஹிம்



துறைமுக அதிகாரசபை சட்டத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதா, சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதா என உச்சநீதிமன்றம் தான் முடிவுசெய்யும். 20 ஆவது திருத்தத்திற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த நீதிமன்றம் அறிவித்தபோது அவ்வாறனா சரத்துகளைஅரசாங்கம் நீக்கியது. நாம் நாட்டின் மீது சுமையேற்றத் தயாரில்லையெனஅமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். எந்தச் சட்டமூலம் தொடர்பிலும் அமைச்சர்கள் மட்டும் இணைந்து முடிவெடுப்பதில்லையென்று தெரிவித்த அமைச்சர் பாராளுமன்றத்திலுள்ள அனைத்து எம்.பிகளும் இணைந்தே முடிவு செய்வதாகவும் அவர் கூறினார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாடு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. துறைமுக நகரம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

துறைமுக அதிகார சபை மூலம் சட்ட மாஅதிபரின் கருத்தறிய முன்வைக்கப்பட்டது. இது அரசியலமைப்பிற்கு முரணாக இல்லையென அவர் அறிவித்துள்ளார். இந்த நிலையில் சட்ட மூலத்திற்கு எதிராக சிலர் நீதிமன்றத்திற்கு சென்றுள்ளனர். இது தான் பொதுவான நடைமுறையாகும். சட்ட மாஅதிபர் குறிப்பிடும் அனைத்தும் அதே போன்று நடப்பதில்லை. சில வழக்குகளை அரசாங்கம் வென்றுள்ளது. சிக்கலான வழக்குகளின் போது சட்டத்தரணிகளின் கருத்தை பெறுவதுண்டு. நீதிமன்றத்தில் அதற்கு மாற்றமான முடிவு வரலாம். அரசாங்கம் உரியமுறைகளின் படி செயற்படுகிறது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எந்த சட்ட மூலத்திற்கு எதிராகவும் எந்த ஒரு பிரஜைக்கும் நீதிமன்றத்தை நாட முடியும். நிறைவேற்று அதிகாரம், பாராளுமன்றம் என்பவற்றினால் ஏதும் குறைபாடு நடந்தால் அதனை சீர் செய்வதற்கு நீதிமன்றத்தை நாட வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இது வழமையானது.

இந்தச் சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானதா? இல்லையா? என நீதிமன்றம் தனது வியக்கியானத்தை அறிவிக்கும். முழுமையான சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானது என்று அறிவிக்கப்படலாம். அவ்வாறு நடந்திருக்கிறது. இன்றேல் சில சரத்துகளை சாதாரண பெரும்மையுடனும் சிலசரத்துக்களை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும் நிறைவேற்ற வேண்டும் எனநீதிமன்றம் அறிவிக்கலாம். சிலசமயங்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும் சர்வஜன வாக்கெடுப்புடனும் நிறைவேற்றுமாறு அறிவிக்கக் கூடும். 20 ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டபோது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும் சர்வஜன வாக்கெடுப்புடனும் நிறைவேற்றுமாறு நீதிமன்றம் அறிவித்தது. அவ்வாறான சரத்துக்களை அரசாங்கம் நீக்கியது. நாம் நாட்டுக்கு மேலும் சுமையேற்றத் தயாரில்லை. சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதில் எமக்கு பிரச்சினை கிடையாது.

அல்லாஹ்வின் கருணைக்குரிய செயல்

நோன்பானது அதிகாலையில் ஸஹர் செய்வதுடன் ஆரம்பமாகக் கூடியதாகும். அதாவது அல்லாஹ்வின் கட்டளைக்கும் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் அமைய அதிகாலையில் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து சுபஹ் தொழுகை அதானுக்கு முன்னர் நோன்பு நோற்பதற்காக என்ற எண்ணத்துடன் உணவு உண்பதையும் நீராகாரங்களைப் பருகுதலையும் குறிக்கும். ஆனாலும் அந்த நேரத்தில் விழித்தெழுந்து ஸஹர் செய்வதென்பது இலகுவான காரியமல்ல.

இருப்பினும் எம்மைப் படைத்து பரிபாலிக்கும் அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றிடவும் உடல், உள மற்றும் ஆன்மீக ரீதியில் பக்குவம் பெற்றுக்கொள்ளவும் அதனைச் செய்தாக வேண்டும்.

அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் ஸஹர் செய்வதன் சிறப்பையும் மகத்துவத்தையும் தெளிவாக எடுத்துக் கூறி வைத்திருக்கின்றார்கள்.

அதாவது 'ஸஹர் நேர உணவு அதிக சிறப்புக்குரியதாகும். அதனைத் தவற விடாதீர்கள். உங்களில் ஒருவர் ஒரு மிடறு தண்ணீரைப் பருகியாவது அதனை நிறைவேற்றிக் கொள்ளுங்கள். ஏனெனில் அல்லாஹ் ஸஹர் உணவு உட்கொள்வோருக்கு கருணை புரிகின்றான். அவனுடைய வானவர்களும் அத்தகையோர் மீது கருணை பொழியுமாறு அல்லாஹ்விடம் கோருகின்றனர்' என்று அன்னார் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்னத் அஹ்மத்)

இதன்படி ஸஹர் செய்வதன் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் சொல்லித் தான் தெரிய வேண்டியதில்லை. அதிகாலை வேளையில் தூக்கத்தை தியாகம் செய்து எழுந்து ஸஹர் செய்வது ஒரு போதும் வீண் போகும் காரியமல்ல. அதன் மூலம் சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வின் கருணையைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. எமது இலக்கும் நோக்கும் அதுவாகவே இருக்க வேண்டும்.

அந்த வகையில் ஸஹர் செய்வதன் மூலமும் அல்லாஹ்வின் கருணையை பெற்றுக்கொள்ள முடியும். அதனால் இந்த மகத்துவம் மிக்க காலப்பகுதியை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். அது ஈருலக வாழ்வின் சுபீட்சத்துக்கும் விமோசனத்திற்கும் அடித்தளமாக அமையும்.

மர்லின் மரிக்கார் ...

இந்தியாவிலிருந்து இறக்குமதியான

புதிய பெட்டிகளுடன் 'யாழ். ஸ்ரீதேவி' பயணம்

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே சேவையில் ஈடுபடும் ஸ்ரீதேவி ரயிலானது புதிய ரயில் பெட்டிகள் இணைக்கப்பட்டு நேற்று முன்தினம் 19 ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபட ஆரம்பித்துள்ளது.

கடந்த மாதம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 10 பெட்டிகள் M11 locomotive இன்ஜினுடன் இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுகின்றன. இவை Air brake system கொண்ட ரயில் பெட்டிகளாகும். இதில் குளிரூட்டப்பட்ட பெட்டிகள் மற்றும் 02 ஆம் 03 ஆம் வகுப்பு பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மதியம் 03.55க்கு புறப்பட்ட இந்த ரயில் காங்கேசன்துறை 22.29 இற்கு சென்றடைந்தது. நேற்றுக் காலை , காங்கேசன்துறையிலிருந்து 03.30 க்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு அதிகாலை 04.00 வந்து அங்கிருந்து கொழும்பு கோட்டைக்கு புறப்பட்டு வந்தது.

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலுள்ள குளங்கள் புனரமைக்க ரூ.300 மில்.நிதி

சிறந்த விவசாயிகளுக்கான விருது வழங்கும் நிகழ்வில் வடக்கு ஆளுநர்

வடமாகாணத்தின் 05 மாவட்டங்களிலுள்ள குளங்களை புனரமைப்பு செய்வதற்காக 300 மில்லியன் நிதியை தனிப்பட்ட ஒதுக்கீடாக திறைசேரி மூலம்பெற்றுள்ளதாகவும் இந்த திட்டங்களின் ஊடாக விவசாய நிலத்தை மேலும் விஸ்தரிப்பதற்கும் விவசாயிகள் பயன் பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கும் முயற்சிப்பதாக வடமாகாண ஆளுநர் திருமதி பீ. எஸ். எம் சார்ள்ஸ் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திற்கான கட்டட திறப்பு விழா மற்றும் வடமாகாணத்துக்குட்பட்ட சிறந்த விவசாயிகளுக்கான விருதுடன் சான்றிதழ் மற்றும் காசோலைகள் வழங்கும் நிகழ்வும் புதிய விவசாய போதனாசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் கடந்த 19ஆம் திகதி காலை யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பீ. எஸ். எம் சார்ள்ஸ் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண விவசாய அமைச்சின் மாகாணப் பணிப்பாளர், விவசாய அமைச்சின் செயலாளர், விவசாய துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் ,

புதிய கட்டட தொகுதியை திறந்துவைத்து கருத்து தெரிவித்த வடக்கு ஆளுநர், ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையின் அடிப்படையிலே உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கான முக்கியத்துவம் வழங்கும்

06

உயிருடன் வந்த இறந்த நபர்

சவச்சாலைக்கு அனுப்பிய டாக்டருக்கு இடமாற்றம்

லோரன்ஸ் செல்வநாயகம்

உயிருடன் இருந்த ஒரு நபரை இறந்துவிட்டாரென தீர்மானித்து சவச்சாலைக்கு அனுப்பிய நீர்கொழும்பு வைத்தியசாலையின் மருத்துவர் தற்காலிகமாக புத்தளம் பொது மருத்துவமனைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளார்.

சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் லால் பனாபிட்டிய இதை தெரிவித்துள்ளார். மேலும் இச் சம்பவம் தொடர்பான விசாரணை முடியும் வரை இட மாற்றம் வழங்கப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டார். அத்தோடு இந்த சம்பவம் குறித்து நீர்கொழும்பு வைத்தியசாலை நடத்திய விசாரணை அறிக்கை கடந்த வாரம் சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த அறிக்கையின்படி, மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வது அமைச்சின் பொறுப்பாகுமென்று

06

புதிய தேர்தல் திருத்தச்சட்டத்தில் சமரசங்கள் செய்யத் தயாரில்லை

25 தனித் தமிழ் மாகாண சபை தொகுதிகள் மலையக மக்களுக்கு உருவாக்கப்பட வேண்டும் – செந்தில் தொண்டமான்

தேர்தல் சட்ட மறுசீரமைப்புகளின் போது மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை கடுகளவேனும் குறைத்துக்கொள்ள தயாராக இல்லை என்பதுடன், சமரசங்களின்றி எமது உரிமைகளையும் அரசியல் பிரதிநிதித்துவத்தையும் வென்றெடுப்பதற்காக களப் பணியாற்றுவோமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளதாவது,

மலையக மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துக் கொள்ள மறைந்த தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் காலம் முதல் அமரர் ஆறுமுகன் தொண்டமான் காலம் வரை ஆளும் அரசாங்கங்களின் இருந்த போதும் சமரமின்றி இ.தொ.கா. குரல்கொடுத்துள்ளது. பல்வேறு அர்ப்பணிப்புகளுக்கு மத்தியிலும் போராட்டங்களுக்கு மத்தியிலும் வென்றெடுக்கப்பட்டுள்ள எமது அரசியல் உரிமைகளையும் பிரதிநிதித்துவத்தையும் புதிய தேர்தல் திருத்தச்சட்டத்தின் ஊடாக இழப்பதற்கு நாம் தயாரில்லை.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஆளுங்கட்சிக் கூட்டத்தில் நான் உட்பட ஜீவன் தொண்டமான் ஆகியோர் கட்சி சார்பாக கூட்டத்தில் கலந்துக் கொண்டோம். இக்கூட்டத்தில் புதிய மாகாணசபை தேர்தல் திருத்தச்சட்ட முறைமை தொடர்பில் விவாதிக்கப்பட்டது. இத்திருத்தச்சட்டத்தின் ஊடாக வெறும் 05 மாகாண சபை உறுப்பினர்களை மாத்திரமே மலையக மக்களால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

கடந்த காலங்களில் கேகாலை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, கொழும்பு, பதுளையென பல்வேறு இடங்களில் இ.தொ.காவின் தேர்தல் பொறுப்பாளராக அமரர் ஆறுமுகன் தொண்டமானால் நியமிக்கப்பட்டிருந்தேன். இந்த சந்தர்ப்பங்களில் இ.தொ.கா பல மாகாண சபைகளில் உறுப்பினர்களை வென்றெடுத்தது. அதனால் நேரடியாக அனைத்து மாவட்டங்களில் களப் பணியாற்றிய அனுபவம் மற்றும் புவியில் ரீதியான தரவுகளின் அடிப்படையில் புதிய தேர்தல் சட்டத்தின் ஊடாக 05 மாகாண சபை உறுப்பினர்கள் மாத்திரமே முழு மலையக மக்களுக்கு கிடைக்கப்பெறுமென பிரதமர் உட்பட ஆளுங்கட்சி தலைவர்களுக்கு எடுத்துரைத்ததுடன், 05 மாகாண சபை உறுப்பினர்கள் என்றால் முழு மலையகத்திற்கும் வெறும் 02 பாராளுமன்ற பிரதிநிதித்துவம்தான் வெற்றிக்கொள்ள கூடிய சூழ்நிலை அமையும் என்பதையும் ஆணித்தரமான சுட்டிக்காட்டினேன்.

இந்த வரலாற்று தவறு இடம்பெறுவதற்கு ஒருபோதும் நாம் அனுமதிக்க மாட்டோம்.

06

ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இலங்கையில் போராடியவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிலிப் குணவர்தன 1960 1964ஆம் ஆண்டு காலப் பகுதியில் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகள் அடங்கிய இரு நூல்கள் முன்னாள் பிரதி சபாநாயகரும் பிலிப் குணவர்தனவின் புதல்வருமான கீதாஞ்ஞன குணவர்தனவினால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டது. சபாநாயகரின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிலிப் குணவர்தனவின் இன்னொரு புதல்வரான வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும், சபை முதல்வருமான தினேஷ் குணவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன மற்றும் சபை முதல்வரின் செயலாளர் ஹர்ஷ விஜேவர்தன உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

பாம் எண்ணெய்க்கு தடை விதிப்பு; சிற்றுண்டி உற்பத்தியாளர் பெரும் அசௌகரியத்தில்!

அரசாங்கம் பாம் எண்ணெய்க்கு விதித்த தடை காரணமாக சிற்றுண்டி உற்பத்தியாளர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை சிற்றுண்டி உற்பத்தியாளர் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.எம். டி சூரிய குமார தெரிவித்துள்ளார்.

பாம் எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் இதுவரையில் வழங்கப்படவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தங்களது உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் அதனை பூர்த்தி செய்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு முடியாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	148.41	153.37
கனடியன் டொலர்	151.47	158.23
யூரோ	229.54	235.91
ஜப்பான் யென்	1.6887	1.8115
சிங்கப்பூர் டொலர்	142.98	147.72
ஸ்டேலிங் பவுன்ஸ்	266.68	274.04
சுவிஸ் பிராங்க்	207.23	215.94
அமெரிக்க டொலர்	190.29	193.21

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	509.23	கட்டார் ரியால்	52.71
குவைத் டினார்	637.29	சவூதி ரியால்	51.38
ஓமான் ரியால்	498.63	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	52.26

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 08ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 08

குறள் தரும் சிந்தனை

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள

பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன; உயர்ந்தவரிடத்தில் மட்டுமே உள்ள அருளாகிய செல்வமே, செல்வங்களில் சிறந்த செல்வமாகும்.

காட்டுமிராண்டித்தனத்தின் இரு வருட துயர நினைவு!

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று காட்டுமிராண்டித்தனமான குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று இன்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. முழு நாட்டையும் பெருந் துயரில் ஆழ்த்திய மிலேச்சத்தனமான அத்தாக்குதல்களின் துயரத்தில் இருந்து மக்கள் இன்னுமே மீளவில்லை.

இந்த துயர சம்பவத்தை நினைவு கூர்ந்து கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், கட்டுவாப்பிட்டி தேவாலயம் உள்ளிட்ட நாடெங்கிலுமுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விஷேட ஆராதனைகள் இன்று இடம்பெறுகின்றன.

இத்தினத்தை முன்னிட்டு ஆராதனைகள் உள்ளிட்ட விஷேட நிகழ்வுகள் இடம்பெறும் அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளரான பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்திருக்கிறார்.

அதேநேரம் இந்த துயர தினத்தின் நிமித்தம் இன்று காலை 8.45 மணி முதல் இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு நாட்டின் அனைத்து மக்களையும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்றைய தின நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் நாட்டிலுள்ள சகல கத்தோலிக்க பாடசாலைகளுக்கும் இன்று விஷேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நினைவு கூரும் வகையில் கட்டுவாப்பிட்டி கல்லறை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னம் இன்று திறந்து வைக்கப்பட உள்ளது. அத்துடன் மேரி ஸ்டெல்லா பாடசாலை மைதானத்திலிருந்து கட்டுவாப்பிட்டி வீதி ஊடாக கட்டுவாப்பிட்டி தேவாலயத்திற்கு செல்லும் மதப் பேரணியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு இத்துயரத்தை நினைவுகூரும் வகையில் பலவித நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன. இரு வருடங்களுக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம், கட்டுவாப்பிட்டிய தேவாலயம், மட்டக்களப்பு சியோன் தேவாலயம் மற்றும் மூன்று உல்லாச ஹோட்டல்கள் அடங்கலாக எட்டு இடங்களில் மிலேச்சத்தனமான தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்களின் விளைவாக 269 பேர் பலியானதோடு 500 பேர் காயங்களுக்கும் உள்ளாகினர்.

இந்நாட்டின் அண்மைக் கால வரலாற்றில் இடம்பெற்ற மிகவும் மோசமான தாக்குதலே இதுவாகும். யாதுமறியா அப்பாவிகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலை முஸ்லிம் தீவிரவாதிகள் குழுவொன்று மேற்கொண்டது. ஆனால் அமைதி, சமாதானம், அன்பு, கருணை மற்றும் மனித நேயத்திற்கு முன்னுரிமை அளிக்கும் இஸ்லாம் மார்க்கம் அங்கீகரிக்காத செயலையே இக்குழுவினர் மேற்கொண்டனர்.

இத்தாக்குதல் தொடர்பில் விசாரித்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்விசாரணை அறிக்கையில் பல விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதோடு சிபாரிசுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கு ஏற்ப பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் விஷேட கவனம் செலுத்தி அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறான சூழலில் இத்துயர நினைவு நாள் தொடர்பில் கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிடுகையில், 'உயிர்த்த ஞாயிறு தாக்குதலை எளிதாக நினைக்காது நாடு எதிர்கொள்ளப் போகும் பேரழிவிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு பொறுப்புள்ள அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சர்வதேச பின்னணியுடன் அடிப்படைவாத தீவிரவாதிகள் மேற்கொள்ளும் இத்தகைய தாக்குதல்கள் கத்தோலிக்கர்களை மாத்திரம் இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுபவை அல்ல. அனைத்து இன, மத மக்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படலாம். நூற்றுக்கும் மேற்பட்ட பயிற்றப்பட்ட தீவிரவாதிகளும் தற்கொலைதாரிகளும் சமூகத்தில் உலாவுகின்றனர். இது விடயத்தில் அரசாங்கம் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். நாம் கத்தோலிக்க மக்களுக்காக மாத்திரம் இக்கோரிக்கையை முன்வைக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பௌத்த, இந்து, முஸ்லிம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் இந்த அடிப்படைவாத தாக்குதல்களின் பின்னணி கண்டறியப்படும் வரை முழு நாடும் அச்சுறுத்தல் மிக்க நிலைமையிலேயே காணப்படும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதனால் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதோடு இத்தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மக்களுக்கும் நீதி நியாயம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அடிப்படைவாத தீவிரவாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். அத்தோடு இந்நாட்டில் எல்லா இன, மத மக்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று சகவாழ்வுடன் ஒற்றுமையாக வாழும் நிலைமை தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காக அனைத்து மக்களும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவது மிகவும் இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

தன்னலமற்ற சேவையில் பகவானைக் காணலாம்

எதிர்வரும் 24ஆம் திகதி 10ஆவது மகாசமாதி தினம்

'நான் இறந்த பின்பும் கல்லறையிலுள்ள எனது எலும்புகள் நம்பிக்கையும் மனஉறுதியும் அளிக்கும். உருவமோ அருவமோ அற்ற நான் எனது பக்தனைச் சென்றடைவதற்கு எந்தவித கதவுகளும் தடையாக அமையாது' என்று சாயிமகான் உறுதிமொழி கொடுத்திருக்கிறார். அதனால் இன்றும் சாயி அவதாரங்களின் அதிர்வுகள், உலகமெங்கும் உணர்த்தியபடி உள்ளன. பகவான் நம்மிடையே வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

பக்தியும், சேவையும் தனது இரண்டு கண்கள் என்று பாபா எப்போதும் கூறுவார். கைதட்டி பக்தியுடன் பஜனை பாடுவதை விட, கைநீட்டி பக்தியுடன் சேவை புரிவது மேலானது என்றும், தன்னலமற்ற சாயி சேவை செய்யும் பக்தனையும் அவனது அடுத்தடுத்த தலைமுறையும் என்றும் கைவிட மாட்டேன் என்ற சத்திய உத்தரவாதமும் அவர் தந்திருக்கிறார்.

அன்போடு சேவை செய்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் அவதாரங்களும் மட்டுமல்ல தெய்வங்களும் முன்னோடியாக இருந்திருக்கின்றன. அதற்கு ஒரு உதாரணம், தெய்வமாகிய கண்ணன் மானிடராகிய பஞ்சபாண்டவருக்கு செய்த சேவைகளை எடுத்துக் காட்டலாம்.

ஜெபம், தபஸ், யக்னம், யாகம் அவற்றால் கிடைக்கும் ஆன்மீக பயனை, தெய்வீக பிரேமயான சேவையோன்றே கொடுக்கக் கூடியது. தன்னலமற்ற சேவை மூலமாக அன்பைப் பெற முடியும். ஒருவருக்கு சேவை செய்யும் பாக்கியத்தை தருபவரும் பகவான்தான். சேவை செய்யும் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு, முன்னுதாரணமாக இருத்தல் வேண்டும். அதற்கு முழு உதாரணமாக இருந்தவரும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாதான்.

சாயி பக்தர்களுக்கு, பகவான் தெய்வீக அவதாரமாகக் காணப்படுகின்றார். மானிட தெய்வமாக வாழ்ந்து காட்டிய பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா, மகாசமாதியிலும் அவரது தெய்வீகத்தை வெளிப்படுத்திக் கொண்டுதானிருக்கிறார்

எல்லோரிடமும் அன்பு காட்டு! எல்லோருக்கும் சேவை செய்! இது பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின் அன்புக் கட்டளை. அன்பு நிறைந்த, தன்னலமற்ற சேவையை மனிதசமுதாயத்துக்கு வழங்கும் ஒரே நோக்கத்துடன் அவதரித்த கலியுகக் கண்ணன் அவர்.

ஏப்ரல் மாதம் 24ம் திகதி, சனிக்கிழமை கலியுகக் கண்ணனான பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் பத்தாவது ஆண்டு மகாசமாதி தினம். இதனை 'ஆராதனா மகோற்சவம்' என்ற பெயரில், வருடாவருடம் கொழும்பு புதுச் செட்டித் தெருவிலுள்ள சாயிநிலையத்தில் பக்தர்கள் கொண்டாடி வருகின்றனர். அன்று மகா ருத்ரா யாகத்துடன், புட்டபர்த்தி மகா சமாதியில் வைத்து பூஜித்து எடுத்து வரப்பட்ட பாபாவின் ஐம்பொன் திருவுருவச் சிலைக்கு அபிஷேகம் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும்.

நாளை 22ம் திகதி வியாழக்கிழமை காலையில், சத்ய சாயியின் முதல் அவதாரமான சீரடி சாயி பாபா வீற்றிருக்கும் சீரடி மந்திரில், இராஜகோபுரம் எழுப்புவதற்கான ஏற்பாடுகளும் நடைபெறவுள்ளன.

எஸ்.டி.எஸ். உதயநாயகம்...✍
தலைவர், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய (கொழும்பு) நிலையம்

வீட்டுப் பாவனைக்கான லிற்ரோ எரிவாயு சிலிண்டர் விலை குறைப்பு

lito premium hybrid gas cylinder அறிமுகம்

உலகின் இயற்கை சக்தி முதல்களை தேவைகளுக்குப் பயன்படுத்துவதில் உலக சமூகம் அக்கறை காட்டி வருகிறது. அதற்கான தீர்வாக நவீன முறைகளை பயன்படுத்தி புதிய உற்பத்திகளை அறிமுகம் செய்ய பல துறைகளிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேசிய வழங்குனர்களாக 150 வருட கால உரிமையையுடைய லிற்ரோ காஸ் லங்கா நிறுவனம் பாவனையாளர்களின் தேவைக்காக புதிய தீர்வை பெற்றுக் கொடுக்க எப்போதும் செயல்படுவதாக அந்நிறுவனத்தின் தலைவரும் தலைமை நிறைவேற்று அதிகாரியுமான அனில் கொஸ்வத்தை கூறினார்.

அதிகரித்து வரும் பாவனையாளர் தேவைக்கு முன்னுரிமை வழங்கி எரிவாயுவுக்கான விசேட தீர்வாக 18 லீற்றர் கொண்ட பிரீமியம் ஹைபிரைட் சிலிண்டரை இலங்கைக்கு அறிமுகம் செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த சிலிண்டர் உலகளாவிய சுத்திகரிப்புக்கு இணைந்ததாக உள்ளதோடு பொருளாதார நன்மையையும் பெற்றுக் கொடுத்து இலங்கையில் LPG துறையில் புதிய மாற்றத்தை கொண்டு வர எதிர்பார்த்துள்ளதாக அவர் கூறினார்.

1,395.00 ரூபாவுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் 18 லீற்றர் லிற்ரோ பிரீமியம் ஹைபிரைட் சிலிண்டர் நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு ஒரு மாதத்துக்கு போதுமானது என நிறுவனம் கூறுகிறது.

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டல் மற்றும் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தின்படி எரிவாயு விலையை நிலையாக ஒரு வருட காலமாக வைத்திருந்ததால் பாவனையாளர்கள் பெரும் பயனடைந்தார்கள். அதே போன்று எமது புதிய உற்பத்தியும் வாக்குறுதிக்கு பெறுமதி சேர்க்கும் என நாம் நம்புகிறோம். 75வீதம் அதிகமான சந்தையை பெற்று தனது வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை நிறுவனம் கொண்டுள்ளது. இலங்கையின் தொழிற்துறையை உலகளாவிய எரிசக்தி தரத்திற்கு ஏற்றதாக மாற்றுவதும் மற்றும் எமது எல்லா நடவடிக்கைகளினதும் பாதுகாப்பை உறுதிபடுத்தல், பாவனையாளர்களின் பணத்துக்கான பெறுமதியை உறுதி செய்தல் ஆகியனவே எமது நோக்கம்" என அவர் தெரிவித்தார்.

தற்போது 18 லீற்றர் லிற்றோ புதிய பிரீமியம் ஹைபிரைட் சிலிண்டர் உலகளாவிய தரத்தில் சந்தைக்கு வரவுள்ளது. இந்த சிலிண்டரின் பாதுகாப்பு குறித்து கருத்துத் தெரிவித்த நிறுவனத்தின் சுகாதார பாதுகாப்பு மற்றும் சூழல் தொடர்பான பணிப்பாளர் ஜயந்த பஸ்நாயக்க "இந்த சிலிண்டரில் LPG யை ஆவியாக்கும் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளதால் கொண்டு செல்வது இலகுவாகும்.

ஐரோப்பிய சங்கத்தின்(90/269) விதியின்படி நபரொருவர் சுமக்கக் கூடிய நிறையின் அளவு 25 கிலோ கிராம். அதன்படி இந்த சிலிண்டரை கையாள்வது இலகுவாகும்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த நிறுவனத்தின் செயற்பாடு பணிப்பாளர் கமல் விக்கிரமசிங்க "இந்த சிலிண்டரை வேகமாக நிரப்ப முடியும் என்பதால் பாவனையாளர்களின் தேவையை விரைவாக பூர்த்தி செய்ய முடியும்" எனக் கூறினார்.

எரிசக்தி துறையில் உலகளாவிய சக்தி மூலங்களை அறிந்து கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் வலுவான பன்னாட்டு பாரம்பரியம் எமக்குள்ளது என நிறுவனத்தின் விறபனை மற்றும் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஜனக பத்திரன கூறினார்.

லிற்ரோ காஸ் நாடு பூராவும் வலுவான விநியோக சேவையை தொடர்ந்து நடத்தி வருகிறது. 42 விநியோக பிரதிநிதிகள், 1500 விற்பனைப் பிரதிநிதிகள் 14,000 (வீடுகளுக்கு விநியோகிக்கும் செயலி) ஊடாக வாடிக்கையாளர்கள், கைத்தொழில் மற்றும் திட்டங்களுக்கான தேவையை பூர்த்தி செய்ய தடையின்றி விநியோகம் நடைபெறுகிறது.

வயலட்...✍

வசதி குன்றிய பிரதேசங்களுக்கு உதவிப் பொருட்கள் விநியோகம்

பிரான்ஸ் நாட்டில் 5வயதில் மறைந்த கர்ணிகா என்ற சிறுமியின் ஞாபகார்த்தமாக காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலின் முயற்சியால் பெற்றுக் கொள்ளப்பட்ட உதவிப் பொருட்கள் பல இடங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

மீள்குடியேற்றப்பட்ட புதியவளத்தாப்பிட்டி கிராமத்தில் வறிய மாணவர்கள் பயிலக் கூடியவாறு 'கர்ணிகா கல்வியகம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான தகரக் கொட்டில் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன் ஏனைய உதவிகளும் தொடர்ச்சியாக வழங்கி வைக்கப்படவுள்ளன.

பின்னர் ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள பின்தங்கிய மளவராயன் மீள்குடியேற்றக் கிராமத்தில் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள், வறிய குடும்பம் ஒன்றுக்கு தையல் இயந்திரம் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

ஆலையடிவேம்பில் கல்வி கற்கும் வறிய சிறுமிக்கு துவிச்சக்கரவண்டி கையளிக்கப்பட்டது. இறுதியாக கோமாரி தேவாலயத்திற்கு ஒருதொகுதி கதிரைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனும் அவ்வைபவங்களில் சமுகமளித்திருந்தார்.

"கடந்த கால யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்றும் அபிவிருத்திகளைவேண்டி பலத்த எதிர்பார்ப்பில் உள்ளனர். பாரிய ஏக்கத்துடன் காலத்தைக் கடத்தி வரும் அவர்கள் மேலும் புறக்கணிக்கப்பட்வருவது மனிதாபிமானமல்ல. எமது உறவுகள் சிறப்பாக வாழ வேண்டும் என்ற சிந்தனையுடன்தான் நமது புலம்பெயர் உறவுகள் சிலர் எமக்கான உதவித் திட்டங்களைச் செய்து வருகின்றார்கள். அதனைக் கொண்டு நாங்களும் எதிர்காலத்திலே முயற்சியுள்ளவர்களாகச் செயற்பட வேண்டும். எமது சமூகத்திலே மிக மோசான சிந்தனையொன்றுள்ளது. முயற்சி என்பது மிகக் குறைவு. ஏதேனும் கிடைக்குமா என்ற சிந்தனையுள்ளவர்களே அதிகமாக இருக்கின்றார்கள். இந்த நிலைமை மாற வேண்டும்.

தமிழ்த் தேசியம் என்று சொல்லப்படுகின்ற தூய்மையான அரசியலை முன்னெடுக்கின்ற அரசியல்வாதிகளால் மாத்திரமே எமது மக்களின் பிரச்சினை குறித்தான விடயங்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியும். நாங்கள் யாருக்கும் சோரம் போய் யாருக்கும் அடிபணிந்து எமது சமூகத்தை விற்றுப் பிழைப்பதற்குத் தயாரில்லை. எமது பிரதேசங்களின் அனைத்து விடயங்களும் அறிந்தவர்களாகவே நாங்கள் செயற்படுகின்றோம்.

எமது சமூகம் ஏமாற்றப்படும் சமூகமாக இருந்து விடக் கூடாது. தம்பி ஜெயசிறில் போன்று இளம் தலைவர்கள் உருவாக வேண்டும். எமது ஒவ்வொரு பிரதேசத்திலும் தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டும். உள்ளூர் அரசியலில் மிகவும் சிறப்பாகச் செயற்படக் கூடியவர்களை நாங்கள் இனங்காண வேண்டும். எதிர்வரும் ஒவ்வொரு தேர்தலிலும் எமது இனம் சார்ந்த அரசியலை எமது உறவுகள் மத்தியில் நாங்கள் உருவாக்கா விட்டால் மாற்றுச் சமூகம் எங்களைக் கூறு போட்டுத் துண்டாடி எம்மை ஆக்கிரமிக்கக் கூடிய ஒரு நிலைமையே ஏற்படும்" என்று தெரிவித்தார்.

"அபிவிருத்திக் குழுக் கூட்டங்களின் போது எமது பிரதேசங்கள் எவ்வாறு பார்க்கப்படுகின்றது என்ற விடயத்தைப் பலரும் அறிந்திருப்பீர்கள். அண்மையில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது. எமது பிரதேசங்கள் அபிவிருத்திகளில் புறக்கணிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரல் அங்கு இருந்தது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அபிவிருத்திக் குழுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கின்றோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வுதவிகள் வழங்கும் நிகழ்வுகளில் புதிய வளத்தாப்பிட்டி வி.வினோகாந்த், ஆலையடிவேம்பு கே.ஏரம்பு கண்ணன், கோமாரி த.சுபோதரன் உள்ளிட்டபலரும் கலந்து கொண்டார்கள்.

வி.ரி.சகாதேவராஜா...✍
(காரைதீவு குறூப் நிருபர்)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்

ஆறாத் துயருடன் இரு வருடங்கள்

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்ற இரண்டு ஆண்டு நிறைவு நினைவஞ்சலி நிகழ்வுகள் இன்றைய தினம் கத்தோலிக்க மக்களால் அனுஷ்டிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் 2019 ஏப்ரல் 21ஆம் திகதி இன்றுபோல் ஒரு தினத்தில் காலையில் ஈஸ்டர் பண்டிகை விசேட திருப்பலி பூசைகளில் கலந்துகொண்டிருந்த மக்கள் நடுவே ஐ.எஸ். ஐ.எஸ்.பயங்கரவாதிகள் என கூறப்படும் அடிப்படைவாத இன வாதிகளால் எதிர்பாராதவிதமாக கோரமான தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நடத்தப் பட்டன.

கொழும்பு கொச்சிக் கடை புனித அந்தோனியார் ஆலயம், கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் ஆகியவற்றின் மீது அடிப்படைவாத தீவிரவாதிகளால் அன்றைய தினம் காலை சமகாலத்தில் ஆலயங்களில் ஆராதனைகள் மற்றும் திருப்பலி பூசைகள் நடந்துகொண்டிருந்தபோது அதில் பங்கு பற்றியிருந்த மக்கள் நடுவில் தீவிரவாத தற்கொலை குண்டுதாரிகளால் இந்த குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. குண்டுத் தாக்குதல்களில் சுமார் 300 பேர் பலியாகியுள்ளதுடன் பல நூற்றுக்கணக்கானோர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.அவர்களில் பெரும்பாலானோர் இன்றுவரை அங்கவீனர்களாக நடமாடுகின்றனர்.

ஒரு குடும்பத்தில் பெற்றோர், பிள்ளைகள் அனைவரும் பலியான சம்பவம், பிள்ளைகள் இருக்க பெற்றோர்கள் பலியான சம்பவம், பெற்றோர்கள் இருக்க பிள்ளைகள் பலியான சம்பவம் என மேற்படி மூன்று தேவாலயங்களிலும் இந்த கோரமான குண்டு தாக்குதலில் பலியான குடும்ப உறவுகளின் அனுபவங்கள் மிகவும் துயரமானவை.

முழு நாட்டையும் சோகத்திற்கு உள்ளாக்கிய இந்த சம்பவம் இடம்பெற்ற தினம் கத்தோலிக்க திருச்சபையினால் கறுப்பு ஞாயிறாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆலயங்கள் மட்டுமன்றி மேலும் சில உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகின. தெய்வாதீனமாக அங்கு பாரிய உயிர் சேதங்கள் எதுவும் நிகழவில்லை.

கத்தோலிக்க ஆயர் பேரவை மேற்படி குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்கள் யார்? அதன் பின்னணியில் செயல்பட்டவர்கள் யார்? அவர்களுக்கு நிதி வழங்கியவர்கள் மற்றும் அனுசரனை வழங்கியவர்கள் யார்? அவர்களை பாதுகாத்தவர்கள் யார்? என்ன நோக்கத்திற்காக அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்? இதற்கான பதிலை அரசாங்கம் பெற்றுத்தர வேண்டும் என கத்தோலிக்க ஆயர் பேரவை அரசாங்கத்தை கேட்டுக்கொண்டது.

அதற்கிணங்க விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்த ஆணைக்குழு அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களான ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புச் செயலாளர் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் அழைத்து வாக்குமூலங்களை பதிவு செய்தது.

அந்த ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டு மேற்படி விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முன்னெடுப்புக்கள் இடம்பெற்றுவருகின்றன.

இத்தகைய சூழ்நிலையிலேயே இன்றைய தினம் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதலில் பலியான மக்களை நினைவு கூரும் நினைவேந்தல் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்பதாக சம்பவத்தில் குற்றவாளிகளாக காணப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த இருதினங்களுக்கு முன்னர் அவர் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி அது தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

நினைவஞ்சலி தினத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருப்பலி பூசைகள், சிறப்பு வழிபாடுகள், மௌன ஊர்வலங்கள் தொடர்பில் தகவல்களை வெளியிட்ட அவர், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் எளிதாக எண்ணக்கூடிய ஒன்றல்ல. இது கத்தோலிக்க மக்களை மட்டும் இலக்காகக் கொண்ட தாக்குதலாக நினைத்துவிடக்கூடாது. முழு நாட்டையும் பேரழிவுக்கு உட்படுத்தும் சூழ்ச்சிகள் இதனூடாக திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அனைத்து இன, மத மக்கள் மீதும் இத்தகைய குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்றும் அரசாங்கம் அது தொடர்பில் எச்சரிக்கையாக செயற்பட வேண்டியமை தொடர்பிலும் அவர் வலியுறுத்தினார்.

கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஆயர்கள் சிலரும் கலந்து கொண்ட மேற்படி செய்தியாளர் மாநாட்டில் அதிர்ச்சி தரும் பல்வேறு தகவல்களும் வெளியிடப்பட்டன.

சுமார் 350 பயிற்சியளிக்கப்பட்ட தீவிரவாதிகள் ஒரு வலையமைப்பாக செயற்படுகின்றனர். அவர்களில் 175 பேர் தற்கொலை குண்டுதாரிகளாக பயிற்சி பெற்றவர்கள். ஈஸ்டர் தினத்தன்று தாக்குதல் சம்பவத்தின் போது தற்கொலை குண்டுதாரிகள் ஏழு பேர் பலியாகி உள்ள நிலையில் ஏனையவர்கள் சமூகத்தில் சுதந்திரமாக அல்லது மறைந்து வாழ்கின்றனர். அவர்களை சிலர் பாதுகாக்கின்றனர்.

அவர்களினால் நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படலாம். எதிர்காலத்தில் பல்வேறு குண்டு வெடிப்புகள் இடம்பெற்று நாட்டில் இரத்த ஆறு ஓடும் நிலை ஏற்படலாம்.

நாட்டை நேசிக்கும் அனைவரும் இதனை அலட்சியமாக எடுத்துக் கொள்ளாமல் எச்சரிக்கையுடனும் அவதானத்துடனும் செயற்படுவது முக்கியமாகும்.

நாட்டிலுள்ள அனைத்து மதத் தலைவர்களும் இது விடயத்தில் ஒன்றிணைந்து செயற்பட்டு நாடு எதிர்கொள்ள நேரும் பேராபத்திலிருந்து நாட்டை பாதுகாத்துக் கொள்வதற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். அதேவேளை சமூகத்தில் மறைந்து வாழும் தீவிரவாதிகள் இனங்காணப்பட்டு அவர்கள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளையும் ஆயர் பேரவை முன்வைத்துள்ளது.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் இலங்கையின் வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு சோகத்தை உருவாக்கியுள்ளது. இனியும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் உரிய நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதே எமது தாழ்மையான கருத்து.

- கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நினைவஞ்சலி மற்றும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுவதுடன் நாட்டின் அனைத்து ஆலயங்களிலும் ஆலயமணி ஒலிக்கப்பட்டு மெழுகுவர்த்திகள் ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.
- கொச்சிக்கடையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு அனைத்து வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன் சர்வ மதத் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.
- கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்திலும் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திலும் நினைவஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

லோரன்ஸ் செல்வநாயகம்...✍

புதிய சட்டம் தயாரிப்புக்கு...

பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இணையத் தளங்கள் மூலமாக பரப்பப்படும் பொய் பிரசாரங்கள் மற்றும் மக்களை தவறாக வழி நடத்தும் தகவல்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் வகையில் சட்டரீதியான சட்டமூலம் ஒன்றை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இணைய தளங்கள் மூலமாக மேற்கொள்ளப்படும் பொய் பிரசாரங்களால் எதிர்கொள்ள நேரும் பாதிப்புகளில் இருந்து மக்களை பாதுகாக்கவும் நாட்டின் சிவில் சமூகத்தினருக்கும் மக்களுக்கும் சரியான தகவல்களை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கும் வகையிலேயே மேற்படி சட்டமூலம் தயாரிக்கப்படவுள்ளது. மேற்படி சட்டமூலத்தை தயாரிக்கவும் சட்ட வரைஞர்களுக்கு ஆலோசனை வழங்கும் வகையிலும் நீதி யமைச்சரும் ஊடகத்துறை அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்துள்ள அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

16 சந்தேக நபர்களுக்கு எதிராக...

இனங்களுக்கிடையில் குழப்பகரமான நிலைமையை தோற்றுவித்தல் மற்றும் மதங்களுக்கிடையிலான பிளவுகளை உருவாக்குதல் போன்ற குற்றச்சாட்டுகளுக்காக மேற்படி 16 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க நௌபர் மௌலவி, இப்ராஹிம் மௌலவி, மொகமட் சாஹிட் மொகமட் சாஜித்,சாதிக் அப்துல்லா,சைனுலாப்தீன் ஆகியோர் உள்ளிட்ட 16 பேருக்கு எதிராகவே மேற்படி குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2018 டிசம்பர் மாதம் மாவனல்லை உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களிலும் புத்தர் சிலைகளை சேதப்படுத்தி இனங்களுக்கிடையில் குழப்ப நிலையை தோற்றுவிப்பதற்கு முயற்சித்த குற்றச்சாட்டுகளை முன்வைத்தே மேற்படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் இணைப்புச் செயலாளர் சட்டத்தரணி நிஸாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.(ஸ)

விஜயதாச ராஜபக்ஷவின் மகன்...

சம்பவம் தொடர்பிலேயே அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. நேற்று பிற்பகல் கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து 1 இலட்சம் ரூபா சரீர பிணையில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்...

உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக இன்று கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட தேவாராதனைகள் நடைபெறவுள்ளன. இவற்றுக்கு ஆகக்கூடிய பாதுகாப்பை வழங்குவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். இதுதொடர்பாக அனைத்து பிரதி பொலிஸ் மாஅதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களின் தொகுதி, பொலிஸ் பிரிவின் அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

07 நாட்களில்...

கடந்த ஏப்ரல் 13 ஆம் திகதி காலை 06.00 மணி தொடக்கம் நேற்று 20ஆம் திகதி காலை 06.00 மணிவரையான காலப் பகுதியில் பதிவான விபத்துக்கள் காரணமாகவே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. முன்னதாக வீதி விபத்துக்கள் காரணமாக அன்றாடம் 06 அல்லது 07 பேர் உயிரிழந்துள்ளதாக பதிவாகியுள்ள நிலையில் தற்சமயம் அந்த எண்ணிக்கை 09 முதல் 10 ஆக உயர்வடைந்துள்ளது.

இது இவ்வாறு தொடருமானால் ஆண்டொன்றுக்கு 3,650 பேர் வீதி விபத்துக்கள் காரணமாக உயிரிழக்கும் நிலை ஏற்படும் என்றும் பொலிஸார் எச்சரிக்கை வெளியிட்டுள்ளனர். எனவே வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண கேட்டுக் கொண்டுள்ளார். கடந்த மார்ச் 04 ஆம் திகதி மாத்திரம் வீதி விபத்துக்கள் காரணமாக 15 பேர் உயிரிழந்துள்ளதுடன், இந்த ஆண்டு இதுவரை மொத்தம் 3,556 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நுண்கடன் திட்டத்தினால்...

மேற்கொண்டுவந்த திட்டத்தை தற்போதைய அரசாங்கம் இல்லாது செய்திப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்கிழமை நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் எதிர்க்கட்சி தலைவர் கேள்வியின் போதே இவ்வாறு குற்றம் சுமத்தினார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கிலே நுண்கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. பெரும்பாலான நாடுகளில் இந்த திட்டம் மிகவும் வெற்றிகராமாக இடம்பெற்று வருகின்றது. எமது நாட்டிலும் நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் இருக்கின்றன. அரச அங்கிகாரத்துடன் அந்த நிறுவனங்கள் செயற்படவேண்டும் என்பதே அதன் நிபந்தனையாகும்.

என்றாலும் நாட்டில் பல நுண்கடன் நிறுவனங்கள் செயற்படுகின்றபோதும் அதுதொடர்பாக முறையாக கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருப்பதால், அந்த நிறுவனங்களின் அதிகாரிகள் நினைத்த பிரகாரம் செயற்படுவதாக மக்கள் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர். நுண்கடன் நிறுவனங்களுக்கு 35சதவீத வட்டியே அறவிடமுடியும் என அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள போதும் சில நிறுவனங்கள் 100வீதம் தொடர்க்கம் 220வீதம் வரை வட்டி அறவிடுகின்றன. இதனால் கிராமங்கள் உட்பட நகர மக்களும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். நுண்கடன் நிறுவனங்களால் கடன் பெற்றுக்கொண்டுள்ள மக்கள் அதனை செலுத்த முடியாமல் அசௌகரிய நிலைமைக்கு ஆளாகி இருக்கின்றனர். அதிகமானவர்கள் கடன் செலுத்த முடியாமல் தங்கள் குடும்பத்துடன் தற்கொலை செய்துகொண்டிருக்கின்றனர். குறிப்பாக இந்த கடன் தொல்லையில் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது பெண்களாவர். இவ்வாறு கடன் பெற்றுக்கொண்டுள்ள பெண்கள் அதனை திருப்பி செலுத்த முடியாமல் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகி இருக்கின்றனர்.

மேலும் கடந்த காலங்களிலும் நுண்கடன் திட்டத்தினால் வடக்கில் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருந்தபோது, அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு கடந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. ஆனால் அந்த நிவாரண திட்டத்தை அரசாங்கம் இல்லாமலாக்கி இருக்கின்றது. நுண்கடன் திட்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு அந்த சுமையில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்றார்.

மே மாதம் முதல் வாரம்...

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் 19 நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வால் எழுப்பப்பட்ட குறுக்கீட்டு கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் தமது குறுக்கீட்டு கேள்வியில்,

கொரோனா வைரஸுக்கான தடுப்பூசி அஸ்ட்ராசெனக்காவின் இரண்டாவது டோஸ் எப்ரல் 23 ஆம் திகதி கிடைக்குமென்றார்கள், தற்போது மே முதல் கிடைக்குமென்கிறார்கள், உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களுக்கமைய முதலாவது டோஸ் வழங்கப்பட்டு 12 வாரங்களுக்குள் இரண்டாவது டோஸ் வழங்கப்பட வேண்டும் .

சபாநாயகர் உள்ளிட்ட பலர் முதலாவது டோஸைப் பெற்றுக்கொண்டுள்ளனர். எனவே இது பாரதூரமான தேசியப் பிரச்சினை. எப்போது இரண்டாவது டோஸ் கிடைக்கும்? எனக் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, அஸ்ட்ரசெனகாவின் முதலாவது டோஸ் ஜனவரி 29ஆம் திகதி வழங்கப்பட்டது. முதலாவது டோஸ் வழங்கப்படும்போதே 4 வாரங்களுக்கு இரண்டாவது டோஸ் வழங்கப்பட வேண்டுமெனத் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

எனினும் இரண்டாவது டோஸ் 11 வாரங்களுக்குப் பின்னர் வழங்கப்பட்டால் 95 சதவீதமானப் பாதுகாப்புக்கூடுமென புதிய தகவல்கள் தெரிவித்தன. இதன்படி இரண்டாவது டோஸ் இம்மாதம் 29 ஆம் திகதி வழங்கப்பட வேண்டும், எனினும் ஓரிரு நாட்கள் தாமதமாவது பிரச்சினை இல்லை என்பதால், மே முதல் வாரம் முதல் இரண்டாவது டோஸ் செலுத்தப்படும் என்றார்.

அஸ்ட்ரோ செனகாவின் இரண்டாவது டோஸை செலுத்த முடியாத நிலையில் தரமற்ற சீன தடுப்பூசியான சைனா பார்மையா நாட்டு மக்களுக்கு வழங்கப் போகிறீர்கள் என இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இடையீட்டுக்கேள்வியை எழுப்பினார்.

இதற்கு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, பதிலளிக்கையில், இரண்டாவது டோஸாகவும் அஸ்ட்ரோ செனகாவை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதில் மாற்றங்கள் ஏற்படுமா? என்பது எனக்குத் தெரியாது என்றார்.

இதனையடுத்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சிலர் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பியதால் சபையில் சிறிது நேரம் வாதப்பிரதிவாதம் ஏற்பட்டது.

தனிப்பட்ட தேவைகளுக்காக...

ஏற்றுக்கொள்ள முடியாது.

இரட்டை முகவராக செயற்படுவதை கர்தினால் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் மீதுள்ள முரண்பாட்டை அவர் தனிப்பட்ட முறையில் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும்.

அதனை விடுத்து ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தை ஒரு கருவியாக பயன்படுத்துவது முறையற்றதென பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா அமோகராம விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இஸ்லாமிய அடிப்படைவாதம் உலகளாவிய ரீதியில் வியாபித்துள்ளது. அறவழி மத கொள்கைக்கு அப்பாற்பட்டவர்கள் இஸ்லாமிய மத கொள்கையை தவறான வகையில் புரிந்துகொண்டு அடிப்படைவாத செயற்பாடுகளில் ஈடுபட்டு ஏனைய மதங்கள் மீது பல்வேறு தாக்குதல்களை முன்னெடுக்கின்றனர். இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் அரச ஆதரவுடன் தலைதூக்குகிறது என்பதை ஆரம்ப காலத்திலிருந்து ஆதாரத்துடன் தெரிவித்தோம். எமது கருத்தை அரச தலைவர்களும், இஸ்லாமிய மத தலைவர்களும், இஸ்லாமிய அரசியல்வாதிகளும், ஏனைய மத தலைவர்களும் பொருட்படுத்தவில்லை.

இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்த எமது கருத்தை முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தி, எங்களை இனவாதிகளாக சித்தரித்து அரசியல் இலாபம் தேடிக் கொண்டனர். இஸ்லாமிய அடிப்படைவாதத்தினால் எதிர்காலத்தில் தோற்றம் பெறும் பாரதூரமான விளைவுகள் குறித்து எவரும் அக்கறை கொள்ளவில்லை.

அனைத்து தரப்பினரது கவனயீனத்தையும் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் இலங்கையின் எத்தன்மையில் வலுப் பெற்றுள்ளது என்பதை 2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரச தலைவர்களும், ஏனைய மத தலைவர்களும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் புரிந்துகொண்டனர். குண்டுத்தாக்குதலில் அப்பாவி மக்கள் மாத்திரமே பலியாகினர்.

இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டது என்பது பல்வேறு விசாரணைகள் ஊடாகவும், குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த அடிப்படைவாதிகளின் காணொளி ஆதாரங்கள் ஊடாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ் கொள்கையினால் ஈர்க்கப்பட்டவர்கள் தாக்குதல்களை முன்னெடுத்தனரென்று மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை ஆரம்பத்தில் குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இவ்வாறான நிலையில் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் மத கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டதல்ல அத்தாக்குதல் அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டதென மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை குறிப்பிட்டுள்ளமையை வன்மையாக கண்டிக்கிறோம்.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் மீதுள்ள பிரச்சினைகளை அவர் தனிப்பட்ட முறையில் பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் விவகாரத்தை ஒரு கருவியாக பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை இவ்விடயத்தில் இரட்டை முகவராக செயற்படுகிறார் என்றார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில்...

விரும்பாமலோ தெரிவிக்க வேண்டியுள்ளது. நாடு சுதந்திரமடைந்தது முதல் அரசாங்கங்கள் கையாண்டுள்ள நிதிக் கொள்கைகள் காரணமாக அந்நிய செலாவணி தொடர்பில் நாடு இவ்வாறு பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளது.

நவீன பொருளாதார முறைமையின் கீழ் எம்மைபோன்ற நாடுகள் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்கின்றன. அதில் முதல் பிரச்சினை சேமிப்பு மற்றும் முதலீடுகளுக்கு இடையில் பாரிய பற்றாக்குறை காணப்படுகிறது. நீண்டகாலம் சென்றாலும் எமது நாட்டில் சேமிப்பானது மந்தகதியிலேயே அதிகரிக்கரிக்கிறது. அதனை குறிப்பிட்டளவு வேகத்தில் முதலீடுகள் அதிகரிக்கின்றன. அதனால் சேமிப்பு மற்றும் முதலீட்டுக்கு இடையிலான பற்றாக்குறையை தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

சேமிப்பைவிட அதிகமான முதலீடுகள் இடம்பெற்றால், வெளிநாட்டு கடன்கள், வெளிநாட்டு மானியங்களை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. சேமிப்பு நிதியில் மாத்திரம் நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்க முடியாது. சேமிக்கப்படும் நிதியில்தான் நுரைத் சோலை அனல் மின் நிலையத்தை அமைக்க வேண்டுமென்றால் அது சாத்தியமற்றது. எமது நாட்டில் சேமிக்கப்படும் நிதியில்தான் குடிநீர்த்திட்டங்கள், பாதை அபிவிருத்தி உட்பட ஏனைய அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டுமென்றால் அவற்றை செய்ய முடியாது.

ஆகவே, மூன்றாம் உலக நாடுகள் எதிர்கொள்ளும் சிக்கல்களை தீர்க்கக்கடன், மானியம் மற்றும் முதலீடுகளை பெற்றுக்கொள்கின்றன.

இரண்டாவது பிரச்சினை ஏற்றுமதி, இறக்குமதிகளுக்கு இடையிலான வேறுபாடுகளாகும். 1979ஆம் ஆண்டுக்குப் பின்னர் சந்தை பொருளாதாரத்தின் அறிமுகத்துடன், ஏற்றுமதி அதிகரிப்பு வேகத்திற்கு பதிலாக இறக்குமதி அதிகரிப்பு வேகம் பாரிய அளவில் அதிகரித்துள்ளது. அதன் பிரகாரம் சந்தை பற்றாக்குறையும் கொடுக்கல் வாங்கல் நெருக்கடிகளும் ஏற்பட்டன. ரூபாயின் பெறுமதியும் கடுமையாக வீழ்ச்சியை நோக்கி நகர்ந்தது. நாட்டுக்குள் வரும் டொலர்களை விட அதற்கு பெறுமதியான ரூபாய்கள் அதிகமாக வெளியில் சென்றால் ரூபா வீழ்ச்சியை சந்திக்க நேரிட்டது. இதனால் அந்நிய செலாவணி மற்றும் அந்நிய கையிருப்புகளுக்கு இடையிலான பிரச்சினைகளும் இருந்தன.

2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ , நாட்டின் ஜனாதிபதியாகும் போது 103 ரூபாவாக டொலரின் பெறுமதி இருந்தது. அக்காலகட்டத்தில் அதிகமாக அந்நிய செலாவணி அவசியமானது. யுத்தச் சூழல், உலக பொருளாதார நெருக்கடி, உலக நிதி நெருக்கடி, மசகு எண்ணெயின் விலை பாரிய அளவில் உலக சந்தையில் அதிகரித்திருந்தமையென பல்வேறு பிரச்சினைகளுக்கு மஹிந்த அரசாங்கம் முகங்கொடுத்தும் 2015ஆம் ஆண்டு நாட்டை கையளிக்கும் போது டொலருக்கான பெறுமதி 131 ரூபாவாகவே இருந்தது. மஹிந்த ராஜபக்ஷவின் 10 ஆண்டு ஆட்சியில் டொலருக்கான பெறுமதி 26 ரூபாவால் தான் அதிகரித்துள்ளது. 2015ஆம் ஆண்டின் பின்னர் அந்நிய செலாவணி தொடர்பில் எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை. மசகு எண்ணெயின் விலையும் 2015ஆம் ஆண்டில் குறைவடைந்திருந்தது. குறிப்பாக 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மசகு எண்ணெ விலை குறைவாக் சேமிப்பு ஏற்பட்டது. என்றாலும் நல்லாட்சி அரசாங்கத்தின் 5 வருடங்களில் டொலரின் பெறுமதியானது 182 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. இதனால் வாழ்க்கைச் செலவு அதிகரித்தது. செலுத்தல் கடன்களுக்கு கடன்களை பெறும் சூழல் அதிகமானது.

2029ஆம் ஆண்டுவரை நாட்டை பாரிய நிதி நெருக்கடியிக்குள் சிக்கவிட்டுள்ளனர். இதற்கு தீர்வைகாண தொடர்ந்து எம்மால் வெளிநாட்டு கடன்களை பெற்றுக்கொள்ள முடியாது. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பது மாத்திரமே ஒரே தீர்வாகும். வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக எமது நாட்டில் உள்ள பாரிய வேலைத்திட்டமாக கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மாத்திரமே உள்ளது.

கொழும்பு துறைமுக நகரத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் இதற்கு எதிராக பாரிய பிரசாரங்களை மேற்கொண்டு இத்திட்டத்தை நிறுத்தினர். ஆனால், மீண்டும் ஒன்றரை வருடங்களில் நாம் வழங்கிய நிலப்பரப்புக்கும் அதிகமான நிலப்பரப்பை வழங்கி முத்தரப்பு உடன்படிக்கையையும் கடந்த அரசாங்கம் செய்துக்கொண்டது. அதனை சட்டமயமாக்கும் பணியையே நாம் கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் ஊடாக செய்துள்ளோம். சுதந்திரத்திற்கு பின்னர் நாட்டின் பொருளாதார வளர்ச்சியாக அமையப்போவது கொழும்பு துறைமுக நகரம்தான்.

2005ஆம் ஆண்டுக்கு முன்னர் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் குறைவான வெளிநாட்டு முதலீடுகளே நாட்டை நோக்கி வந்திருந்தன. ஆனால், எதிர்வரும் ஐந்து வருடங்களில் 15 பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு முதலீட்டாக இத்திட்டத்தின் ஊடாக நாம் எதிர்பார்க்கிறோம். இதனைதான் சிலருக்கு ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எம்.சி.சி உடன்படிக்கையில் 477 மில்லியன் டொலர்களுக்காக முழு நாட்டையும் காட்டிக்கொடுக்க முற்பட்டவர்கள், துறைமுக நகருக்கு கிடைக்கபோகும் முதலீட்டின் மூலம் உருவாகும் புதிய தொழில்வாய்ப்புகள், வருமான வழிமூலங்கள் உருவாகுதல் என்பவற்றை தடுக்கின்றனர்.

குறைந்த வருமானம் பெரும் நாடாக இருந்த இலங்கையை மத்திய வருமானம் பெரும் நாடாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மாற்றியிருந்தார். ஆனால், நாடு இன்று பாரிய கடன் நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. இதிலிருந்து மீண்டெழ புதிய மூலதன உட்பாய்ச்சல் அசியமாகும். அதற்காக உருவாக்கப்படும் பின்புலத்தை சீர்குலைக்கவே எதிரணியினர் செயற்பட்டு வருகின்றனர் என்றார்.

மட்டக்களப்புக்கு மே மாதம் விஜயம்...

தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவுள்ளார். ஜனாதிபதியின் இவ்விஜயத்தின்போது அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சு செயலாளர்கள் மற்றும் அரச உயரதிகாரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். ஜனாதிபதியின் விஜயத்துக்கான ஏற்பாடுகள் தொடர்பாக விசேட கூட்டம் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் ஜனாதிபதி இணைப்பாளர் இசுறு ஹேரத்தின் பங்குபற்றுதலுடன் நேற்று (20) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

உயர் நீதிமன்றில் சமர்ப்பித்த...

அபேவர்தன சபையில் அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியதையடுத்து இடம்பெற்ற சபாநாயகரின் அறிவிப்பின்போதே சபாநாயகர் இதனை அறிவித்தார்.

அரசமைப்பின் 121(1) உறுப்புறுமையின்படி இலங்கைக் காணி அபிவிருத்தி ஆணைக்குழு தொடர்பிலும் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களின் பிரதிகள் தனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் இதன்போது சபைக்கு அறிவித்தார்.

இலங்கை படகொன்றிலிருந்து...

இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்திய போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையிலேயே சுமார் 340 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இப் போதைப்பொருள், சிவப்பு நிற ஈரானிய படகொன்றிலிருந்து இலங்கை படகுக்கு மாற்றப்பட்டதாக சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி, சர்வதேச சந்தையில் 1,750 கோடி இந்திய ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திகள் தெரிவிக்கின்றனர்.

கொரோனா பரவல் தீவிரம்...

செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அது தொடர்பில் அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இம்முறை மேதினக் கூட்டங்களை நடத்துவதில்லை என்ற இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா,சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரிக்கும் எச்சரிக்கை சூழ்நிலை காணப்படுவதாகவும் அதற்கிணங்க அனைத்து கட்சிகளும் மேதின கூட்டங்களையும் மற்றும் மேதினம் தொடர்பான ஊர்வலங்களையும் நடத்துவதில்லை என தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ)

சட்டம் ஒழுங்கு செயற்பாடுகளில்...

அரசாங்கம் என்ற வகையில் நாம் இவற்றில் தலையீடு செய்யவில்லையென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் 11 முஸ்லிம் அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன. அவற்றின் சொத்துக்களை முடக்குவது பற்றியும் தெரிவிக்கப்படுகிறது.பொதுபல சேனா தொடர்பில் அரசாங்கம் ஏதாவது முடிவு எடுத்துள்ளதா? என்று ஊடகவியலாளர் ஒருவர் வினவினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

அரசாங்கம் இவற்றைச் செய்வதாக தவறான கருத்து தெரிவிக்கப்படுகிறது. ஆணைக்குழு சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அதிலுள்ள விடயங்கள் பற்றிஅரசாங்கம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும். இதற்கிடையில் சட்டம் ஒழுங்கு அமைச்சினால் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் சுயாதீனமான செயற்பாடுகளில் நாம் தலையீடு செய்ய மாட்டோம். சட்டவரையறைகளுக்கு உட்பட்டதாக சட்ட மாஅதிபர் திணைக்களம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். சட்டம் ஒழுங்கு செயற்பாடுகளில் அரசாங்கம் தலையீடு செய்யாது.

அலரிமாளிகையில் இருந்து முடிவுகளை எடுக்கமாட்டோம். சட்ட மாஅதிபர் திணைக்களத்தை அழைத்து யாருக்கு எதிராக வழக்கு தொடர்வது என்று அறிவிக்கமாட்டோம் என்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்...

பூர்வாங்க சட்டபூர்வ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு, குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம், பயங்கரவாத விசாரணைகள் திணைக்களம் என்பன 8 இடங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

மனிதப் படுகொலை மற்றும் சூழ்ச்சிகளை மேற்கொண்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் 32 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்காக 8 சம்பவங்கள் தொடர்பாக 8 ஆவணங்கள் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை முன்னிலைப்படுத்துவதற்கு சட்டமா அதிபர் எதிர்பார்த்துள்ளார். மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பதாக வெளியிடப்பட்டது, தற்போது அதுதொடர்பில் வழக்கு தொடர்வது சட்டமா அதிபரின் பொறுப்பாகும். பொலிஸார் அவர்களது செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ள நிலையில் சட்டமா அதிபர் தவிர்ந்த வேறு எவருக்கும் அதுதொடர்பில் வழக்கு தொடர முடியாது.

அதற்கு மேலதிகமாக 75 நபர்கள் தடுத்து வைப்பு உத்தரவின் கீழ் உள்ளனர். அவர்களுக்கான விசாரணை சம்பந்தமான ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்படும். எவ்வாறாயினும் இச்சம்பவங்களின் முக்கிய சந்தேகநபர்கள் தொடர்பில் நாம் விசாரணைகளை நிறைவுசெய்து அதற்கான ஆவணங்களை சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ளோம். அதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களின் பின்னணியில் அரசியல்வாதிகள் உள்ளதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் கர்தினால் குறிப்பிட்டுள்ளார் என்பதையும் ஊடகவியலாளர்கள் மத்தியில் தெரிவித்த அமைச்சர் சரத் வீரசேகர, குறிப்பாக ஆலயங்கள் இலக்கு வைக்கப்பட்ம

சிறு விளம்பரம்



மோட்டார் வாகனங்கள்

112

மெஸ்டா கார்கள் விற்பனைக்கு

WP KJ-2838 Mazda RX8, 2003, car கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03, தொ. பே: 0 714-542958. 029019

119

பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

WP DAG-3510 Mahindra mini truck 2018, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03, தொ.பே: 0714-54 2958 . 029017

122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP BHS-6675 Honda Dio, 2019, motor cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03, தொ.பே: 0711-210810. 029023

WP Y I-527 5 Ba jaj, 2010, th r eew heel கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான் ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03, தொ.பே: 011-210810. 029022

வேலைவாய்ப்பு

320

வெற்றிடங்கள்

ஹோட்டல்கள், பேக்கரிகள்

உணவக சேவையாளர் வெற்றிடம் பேலியகொட மெனிங் மார்க்கெட் புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியின் உணவ கத்திற்கு கீழ்க்காணும் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளல். உள்ளூர் உணவுகள், இந்தியன், சைனீஸ், ரைஸ், கொ த்து , சோ டீஸ், பே ஸ்ட்ரி தயாரிக்க பயிற்சி பெற்ற அனு பவமுள்ள பாஸ்மார் நேர்முகத் தேர்விற்கு வார நாட்களில் மத்திய பஸ் நிலைய மேதா கட்டிடம் முதலாம் மாடி, இல. 101 அறைக்கு வாருங்கள். தொடர்பு 0777971196, 0777958149. 029192

Repeat Your ad For Better Offers

பம்பலப்பிட்டி, மஹரகம, வெள ளவத்தை, கொள்ளுப்பிட்டி பிர தேசங்க ளில் அமை ந்துள்ள எமது நிறுவன த்திற்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு. ★ கெசியர், ★ கோக்கி (Chinese / Rice & Curry), ★ வெயிட்டர் (பயிற்சி பெற்ற/ பெறாத) , ★ கிச்சன் ஹெல்பர், ★ கிளீனர்ஸ், ★ ரூம் போய்ஸ். கவர்ச்சி கர மான சம்பளம் அ த்து டன் சேவைக் க ட்ண ம், உணவு மற்று ம் தங்குமிட வசதிகள் இலவசம். 0117203845, 0114961460, 0724557437. 029171

325

தொழில்துறை பொது

வாகன புதுப்பித்தல், கழுவுதல் ஆகியவற்றி ற்காக ஊழியர் தேவை. சிறந்த சம்பளம் மற்று ம் இலவச தங்கு மிடம் அத்துடன் உணவு. இடம் பத்தரமுல்ல. 0773576559/ 0777910821 029037

காணி/தோட்டம்

608

எஸ்டேட் குத்தகைக்கு

55 வருட காலமாக பயிரி டப்படாத 2 ஏக்கர் தரிசு நிலம் நியாய விலைக்கு உடன் விற்பனைக்கு. 071 3305375. 029170

நெடுஞ்சாலைகள் அமைச்சு

பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல 01/2019 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாட்டிற்கமைய செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு (PMU) என தாபிக்கப்பட்டுள்ளதும் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதுமான பின்வரும் வெளிநாட்டு உதவி செயற்றிட்டத்தில் கருத்திட்ட கணக்காளர்கள் பதவிகளுக்காக தகைமைவாய்ந்த இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி

கருத்திட்ட கணக்காளர் - இவ்வமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவிற்காக வெற்றிடங்களின் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றன.

இப்பதவிக்காக தேவைப்படும் தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. கருத்திட்ட கணக்காளர் (PS 4)

(ஐக்கிய அமெரிக்க டொலர் 250 மில்லியனுக்கு மேல்)
குறைந்தபட்ச தகைமைகள் மற்றும் அனுபவம் (கீழே 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணக்கீடு தொடர்பான துறையில் இளநிலைப் பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

கணக்கீடு தொடர்பான துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்திற்கு நிகரான தகைமையைக் கொண்டிருத்தல்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து தொடர்புடைய துறையில் இணை உறுப்பினர் அல்லது அதனையொத்த தொழில்சார் தகைமையை பெற்றிருத்தல்,

அத்துடன்

கணக்கீடு தொடர்பான துறையில் குறைந்தபட்சம் 09 வருடங்கள் முற்றகைமை அனுபவத்தினை கொண்டிருத்தல்.

2. கணக்கீடு தொடர்புடைய அரசாங்க முழு நாட்டுக்குமான சேவையில் அல்லது அதனையொத்த சேவைகளில் வகுப்பு III/II அல்லது அதற்கு மேல் உள்ள உத்தியோகத்தராகவிருத்தல்.

அத்துடன் கணக்கீடு தொடர்புடைய துறையில் வகுப்பு III/II இல் உள்ள பதவியில் குறைந்தபட்சம் 09 வருடங்கள் அனுபவத்தினை கொண்டிருத்தல்

நிபந்தனைகள் :

02. வயது எல்லை :
விண்ணப்பப்படிவம் சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியில் 64 வயதிற்கு உட்பட்டிருத்தல்.

03. சம்பளம்: பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 01/2019 இனை அடிப்படையாகக் கொண்டு சம்பளம் வழங்கப்படும்.

04. தொழில் நிபந்தனைகள் :
இந்நியமனம் ஒப்பந்த அடிப்படையிலானது. ஆரம்ப ஒப்பந்த காலமானது ஒரு வருடமாகும். செயற்றிறனை கருத்திற்கொண்டு ஒப்பந்தமானது நீடிப்பு செய்யப்படக்கூடியதாகும்.

05. ஏனைய நன்மைகள்:
அடிப்படைச் சம்பளத்திலிருந்து செயற்றிட்டத்தினால் 12% ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்வதுடன் அதன்மீது ஊழியரினால் 8% உம் இதனுடன் சேர்த்து மேலதிகப் பங்களிப்பாக 3% ஊழியர் நம்பிக்கை நிதிக்கு பங்களிப்புச் செய்யப்படும்.

தகைமை, அனுபவம் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்கள் மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்கள் போன்றவற்றின் முழு விபரங்களையும் கொண்டுள்ள விண்ணப்பங்கள் விண்ணப்பக் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் விளம்பரத்தில் காணப்படுகின்ற பதவி (ஐக்கிய அமெரிக்க டொலர் 250 மில்லியனுக்கு மேல்) எழுதப்பட்டு 04.05.2021 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், நெடுஞ்சாலைகள் அமைச்சு, "மகநெகும மஹமெதுர", இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அதிகாரசபைகள் போன்றவற்றில் கடமை புரியும் விண்ணப்பதாரிகள் கருத்திட்ட பதவிக்கான தங்களது விண்ணப்பங்களை தமது தற்போதைய நிரந்தர பதவியிலிருந்து விடுவிப்பதற்கான உடன்படிக்கையை தெளிவாகக் குறிப்பிட்டு தொடர்புடைய நிறுவனத் தலைவருக்கு ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை "mohsl.gov.lk" என்ற நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்துடன் உரிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறல்லாத விண்ணப்பப்படிவங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

செயலாளர், நெடுஞ்சாலைகள் அமைச்சு.

NSB

தேசிய சேமிப்பு வங்கி

விலைமனுக்களுக்கான அழைப்பு

விலைமனு இல.: NSB/PT/ITE/2021/07

Supply, Installation, Commissioning & Maintenance of 2 Nos. SERVERS for National Savings Bank

சேர்வர்களை (SERVERS) வழங்குவதற்காக புகழ்பெற்ற முதன்மையான உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற இலங்கையிலுள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

பெறுகையின் விளக்கம்	2 சேர்வர்கள் (SERVERS)
பெறுகையின் முறைமை	தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்
ஏற்புடையதான மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம்	2,000 ரூ.
சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைமனுப்பிணையின் பெறுமதி	40,000 ரூ.
விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்	2021.05.11 அன்று பி.ப. 3 மணிக்கு
விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம்	2021.05.12 அன்று மு.ப. 10 மணிக்கு

1. கேள்விக்கு விண்ணப்பிக்கும் முன்பும் கேள்வியானது வழங்கப்பட்ட பின்பும் ஒப்பந்தத்திற்காகவும், முகவரொருவராக அல்லது உபமுகவரொருவராக, பிரதிநிதியாக அல்லது எந்தவொரு கேள்விதாரருக்கு மற்றும் அல்லது சார்பாக பெயர் குறிப்பிட்டவராக செயற்படின், அவர் பதிவு செய்தல் வேண்டுமென்பது கட்டாயமானதொன்றாகும்.
2. கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கி, வழங்கல் பிரிவு, வழங்கல் முகாமையாளரிடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். 2021.04.21 ஆம் திகதியிலிருந்து 2021.05.11 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் எழுத்து மூல விண்ணப்பமொன்றின் மூலம், கேள்விப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 91 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதும் மேலே சுட்டிக்காட்டியவாறு நிகரான பெறுமதிக்கும் தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய வங்கி உத்தரவாதம்/ விலைமனு பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்பட்ட பின்னர் விலைமனுக்கள் உடனடியாகவே திறக்கப்படுவதுடன் மு.ப. 10 மணிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் விலைமனுவொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக் கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

வழங்கல்கள் பிரிவின் வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர் - கூட்டுரு பெறுகைக் குழு – கீழ் மட்டம்
தேசிய சேமிப்பு வங்கி
இல. 255, காலி வீதி,
கொழும்பு-03.

උතුරු මැද පළාත් ක්‍රීඩා දෙපාර්තමේන්තුව
விளையாட்டுத் திணைக்களம் - வடமத்திய மாகாணம்
DEPARTMENT OF SPORTS - NORTH CENTRAL PROVINCE

கேள்வி அழைப்பு பெறுகை அறிவித்தல்

வடமத்திய மாகாண விளையாட்டு திணைக்களத்தில் 2021ஆம் ஆண்டிற்காக விளையாட்டு ஆடைகளை கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரல்

கேள்வி இலக்கம்: NCP/DS/PD/E02/05/(xvi)/2021

வடமத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்திற்கு 2021ஆம் ஆண்டிற்கான விளையாட்டு ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள நிறுவனங்களில் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் 2021 மே 17 பி.ப. 2.00 வரை ஏற்கப்படும்.

தகவல்கள்

02. இக் கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் நடைபெறும்.

03. இக் கேள்வியுடன் சம்பந்தப்பட்ட கேள்வி அழைப்பு, கேள்வி நிபந்தனைகள் மற்றும் கேள்வி மாதிரிகள் கேள்விதாரர்களுக்கான அறிவுரைகள் மற்றும் குறித்த வேறு விபரங்கள் அடங்கிய கேள்வி கோரல் ஆவணங்களை மீளளிக்கப்படாத ரூ. 1000/- தொகையை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள தலைமையகத்திற்குச் செலுத்தி 2021.04.21 முதல் 2021.05.13 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ள முடிவதுடன் கேள்விதாரர்களுக்கான அறிவுறுத்தல் பத்திரம் மற்றும் கேள்வி மாதிரிப் பத்திரம் என்பவற்றை அலுவலக நேரங்களில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

04. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 'கேள்வி இலக்கம் NCP/DS/PD/E02/05/(xvi)/2021 என்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு 2021.05.17 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மாகாண விளையாட்டு திணைக்களத்தின் மாகாண பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

05. வடமத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கின்ற விளையாட்டு ஆடைகளின் அளவு

உருப்படி இலக்கம்	ஆடை விபரம்	அளவு
1	மேசைப் பந்து	14
2	பெட்மிண்டன்	14
3	கிரிக்கெற்	21
4	நெட்போல்	12
5	வொலிபோல்	28
6	கபடி	24
7	கூரைப் பந்து	24
8	ஹொக்கி	36
9	எல்லே	40
10	காற்பந்து	40
11	செஸ்	12
12	கெரம்	10
13	கடற்கரை வொலிபோல்	04
14	கடற்கரை கபடி	12
15	ரகர்	24
16	மெய்வல்லுனர்	140
17	மல்யுத்தம்	38
18	கராட்டே டோ	40
19	தைகொன்டோ	32
20	ஜுடோ	38
21	பொக்சின்	30
22	உடற்பயிற்சி	18
23	வுஷீ	32
24	ஜிம்னாஸ்டிக்	20
25	நீச்சல்	60
26	பாரம் தூக்குதல்	32
27	Track Kit (டிசேர்ட்/ பொட்டம்)	895

06. விளையாட்டு ஆடை அளவுகள் திருத்தம் செய்யப்படக்கூடியதுடன் அதுபற்றிய அதிகாரம் திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரியது.

07. 2021.05.17 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் மூடப்பட்ட பின்பு உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு அதற்காக சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்கள் வடமத்திய மாகாண விளையாட்டு திணைக்களத்தின் தொ.பே.இல. 025-4928391 / 4928392 அல்லது பெக்ஸ் இல. 025-2234473 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு
வடமத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களம்
அநுராதபுரம்.

afc தங்கக் கடன் சேவை தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.01.2020 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 28.04.2021 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி மற்றும் வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவௌ, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹுவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட

ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:
722, கோட்டை வீதிஇராஜகிரிய
28.04.2021

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

1956 நிலை இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
நம்பிக்கையுடன் கட்டியெழுப்பப்பட்ட முதுமக்கள் சக்தி

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

நீர்கொழும்பு மாநகர சபை
விலைமனுக்களுக்கான அழைப்பு

நீர்கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரினால் பின்வரும் உருப்படியைக் கொள்வனவு செய்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. **பெக்கோ லோடர் இயந்திரமொன்று**
2. **250kv மற்றும் 100kv மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் 02**

2. விலைமனு ஆவணங்கள் மற்றும் அறிவுறுத்தல் படிவங்களை பெக்கோ லோடர் இயந்திரத்திற்கும் 02 மின் பிறப்பாக்கி இயந்திரங்களுக்கும் வெவ்வேறாக மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி 2021-04-21ஆம் திகதி முதல் 2021-04-11ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையான காலத்தில் மாநகர கணக்காளர் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3. விலைமனு ஆவணங்களை 2021-04-21ஆம் திகதி முதல் 2021-05-11ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையான காலத்தினுள் கணக்காளர் திணைக்களத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2021-05-11ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2021ஆம் வருடத்தில் பெக்கோ இயந்திரமொன்றை வழங்குதல் / 02 மின்பிறப்பாக்கி இயந்திரங்களை வழங்குதல்'' எனக் குறிப்பிடவும்.

மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
நீர்கொழும்பு.

திகதி 19.04.2021 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத் சீட்டிழுப்பு இலக்கம் : 4456 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 14,112,440.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 9 2 0 3 7 8 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,337,169.00

கொவிசெத Govisetha சீட்டிழுப்பு இலக்கம் : 2751 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,797,840.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 15 27 66 71 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,567,640.80

Mega POWER மெகா பவர் 10 சீட்டிழுப்பு இலக்கம் 815 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,766,060.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 128,924,043.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Y சுப்பர் இலக்கம் 08 வெற்றி இலக்கங்கள் 10 24 27 30

தன நிதானய சீட்டிழுப்பு இலக்கம் : 493 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,782,840.00
L 04 28 31 33 ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள் அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,346,474.80

வாசனா சம்பத சீட்டிழுப்பு இலக்கம் : 1676 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,444,800.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 11 49 74 86 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,067,478.70

19.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 831,777
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 32,903,980.00
ரூ. 2,000,000.00 பரிசுகள் 02 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 25
• ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
• பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
• வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

அறிவித்தல்

தேசிய உறுப்பு மாற்றுக் கொள்கையின் வரைபு தயாரிக்கப்பட்டு சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் **www.health.gov.lk** பொது மக்களின் பார்வைக்காக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான உங்களின் பின்னூட்டங்கள் மற்றும் கருத்துக்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதி பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவைகள்) 1
சுகாதார அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு-10.

நீர் வழங்கல் அமைச்சு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (தேநீவமவச)

ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட
''அனைத்து செயற்றிட்டங்களுக்குமான நீர்'' 2021-2024

பிற்சேர்க்கை - 01

2021 மார்ச் 30 ஆம் திகதியிடப்பட்ட ''ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்'' என்ற விடயம் தொடர்பான பத்திரிகை அறிவித்தல் பிற்சேர்க்கை-01 இனால் சீரமைக்கப்பட்டுள்ளது.
''ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தலுக்கான'' விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் திகதியானது 2021.05.05 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
பிராந்தியங்களிலுள்ள ஒப்பந்தக்காரர்களின் சௌகரியத்தை பரிசீலித்து, மீளளிக்கப்படாத கட்டண கொடுப்பனவு மற்றும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பிராந்திய ஆதரவு நிலையங்களில் (பிஆநி) சமர்ப்பித்தல் ஆகியவற்றிற்காக கீழே பட்டியலிடப்பட்டுள்ள வகையில் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

01.	பிஆநி (வடக்கு) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, யாழ் வீதி, வவுனியா.
02.	பிஆநி (கிழக்கு), தேநீவமவச, இல. 48ஏ/1, கண்டி வீதி, மட்டிக்களி, திருகோணமலை.
03.	பிஆநி (மத்தி), கெட்டம்பே, பேராதனை.
04.	பிஆநி (சப்ரகமுவ), தேநீவமவச, புதிய நகர், இரத்தினபுரி.
05.	பிஆநி (தெற்கு). 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரண, மாத்தறை
06.	பிஆநி (வட மேல்) அலுவலகம், தேநீவமவச, தம்புள்ள வீதி, குருநாகல்
07.	பிஆநி (மேல்/ வடக்கு), அலுவலகம், இல. 433/4ஏ, கனேமுல்ல பாதை, கடவத்த.
08.	பிஆநி (மேல்/ மத்தி) இல. 175ஏ, களுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.
09.	பிஆநி (மேல்/ தெற்கு), இல. 97, அங்கலான புகையிரத நிலைய வீதி, அங்குலான, மொறட்டுவ.
10.	பிஆநி (மேல் - உற்பத்தி), தேநீவமவச, உடுமுல்ல பாதை, முல்லேரியாவ புதிய நகரம்.
11.	பிஆநி (ஊவா) 1 ஆம் மாடி, மோட்டர் சேர்விஸ் நிலைய கட்டிடம், பதுளை வீதி, பண்டாரவளை.
12.	பிஆநி (வட மத்தி), கொடகே மாவத்தை, அனுராதபுரம்.

தலைவர்,
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை.

எனது இலக்கம் HIK/DS/LND/04/02/15
காணி அமைச்சின் இலக்கம் : 03/J/77/E/332

காணி எடுத்தற் சட்டத்தின்
7 ஆவது பிரிவின் கீழான அறிவித்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் அரசிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணிக்காக அச்சட்டத்தின் 9 ஆவது பிரிவின் கீழ் உரிமை மற்றும் நட்டஈட்டுப் பரிசோதனை 2017.10.16 ஆம் திகதி ஹிக்கடுவை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னால் நடாத்தப்பட்டதனை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலதிக விபரங்களுக்காக இலக்கம் 1844/54 மற்றும் 2014/01/08 ஆம் திகதி கொண்ட சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரத்தைப் பார்க்கவும்.

உப அட்டவணை

மாவட்டம்	:	காலி
பிரதேச செயலகப் பிரிவு	:	ஹிக்கடுவை
கிராம சேவகப் பிரிவு	:	இல 67 பீ,பெரேலிய தெற்கு
கிராமம்	:	ஆ.வ.கா.1775
நிலத் துண்டின் அளவு	:	02
மொத்தக் காணியின் அளவு	:	பர்சஸ் 38.7
நிலத் துண்டு இலக்கம்	:	ஹிக்கடுவை
காணியின் பெயர்	:	பெரேலிய

ஏ.எம்.ஏ.யூ.ஜீ.காரியவசம்
பிரதேச செயலாளர்
ஹிக்கடுவை பிரிவு,

2021 சித்திரை மாதம் 19 ஆந் திகதி
ஹிக்கடுவை பிரதேச செயலாளர்
அலுவலகத்தில் இருந்து,

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

மக்கள் வங்கி

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29வது (ஈ) பிரிவின் கீழான முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும்.

2019 மே மாதம் 17ஆம் திகதி நடத்தப்பட்ட தமது பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29(ஈ) பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் பின்வரும் முன்மொழிவு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்காகக் கூட்டிணைக்கப்பட்டதும் பதிவு இலக்கம் PV5815 கொண்ட மற்றும் கொழும்பு 03, புனித மைக்கல் வீதி, 18ஆம் இலக்கமுடைய இடத்தில் தமது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளதுமான கம்பெனியான வோக்கர்ஸ் பைலிங் (பிரைவேட்) லிமிட்டட் என்ற கம்பெனி கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் ஆர்.ஏ.சி. குமாரசிறி அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2018 ஆகஸ்ட் 06ஆம் திகதியிட்ட இலக்கம் 1985 கொண்ட ஈட்டு முறி, கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் டீ.எஸ். மஹவத்த அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2015 ஒக்ரோபர் 12ஆம் திகதியிட்ட இலக்கம் 480 கொண்ட ஈட்டு முறி, கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் டீ.எஸ். மஹவத்த அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2016 சனவரி 20ஆம் திகதியிட்ட இலக்கம் 548 கொண்ட ஈட்டு முறி மற்றும் கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் டீ.எஸ். மஹவத்த அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2016 சனவரி 20ஆம் திகதியிட்ட இலக்கம் 549 கொண்ட ஈட்டு முறி என்பவற்றின் மீது அறவிடுவதற்குள்ள செலுத்தீடுகளைச் செலுத்தத் தவறியுள்ளதால் தற்பொழுது மேற்படி முறிகளின் மீது ரூபா நூற்று முப்பத்து ஒன்பது மில்லியன் நான்கு இலட்சத்து பதினெட்டாயிரத்து முந்நூற்று அறுபத்து ஒன்பது சதம் தொண்ணூற்று மூன்று (ரூ.139,418,369.93) பணத் தொகையும் அதன் மீது வட்டியும் மக்கள் வங்கிக்கு தற்பொழுது அறவிடுவதற்கு நிலுவையாகவும் கிடைக்க வேண்டியதாகவும் உள்ளது.

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் ஆர்.ஏ.சி. குமாரசிறி அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2018 ஆகஸ்ட் 06ஆம் திகதியிட்ட இலக்கம் 1985 கொண்ட, கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் டீ.எஸ். மஹவத்த அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2015 ஒக்ரோபர் 12ஆம் திகதியிட்ட இலக்கம் 480 கொண்ட மற்றும் கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் டீ.எஸ். மஹவத்த அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2016 சனவரி 20ஆம் திகதியிட்ட இலக்கம் 548 கொண்ட மேற் குறிப்பிட்ட ஈட்டு முறிகள் மூலம் மேற்படி வங்கிக்கு ஈடுவைத்த இதன் கீழ் முதலாவது மற்றும் இரண்டாவது அட்டவணைகளில் விரிவாக விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரங்கள் 2019.05.13ஆம் திகதி முதல் விற்பனை திகதி வரை ரூபா நூற்று முப்பத்து ஒன்பது மில்லியன் நான்கு இலட்சத்து பதினெட்டாயிரத்து முந்நூற்று அறுபத்து ஒன்பது சதம் தொண்ணூற்று மூன்று (ரூ.139,418,369.93) மேற் குறிப்பிட்ட பணத் தொகையும் ரூபா முப்பத்து நான்கு மில்லியன் இருநூற்று ஐம்பத்து மூவாயிரத்து முந்நூற்று பதினான்கு சதம் பதினைந்து (ரூ. 34,253,314.15) பணத் தொகையின் மீது வருடாந்தம் நூற்றுக்கு பதினெட்டு (18%) வீதம் மேலதிக வட்டியும், ரூபா தொண்ணூறு மில்லியன் முந்நூற்று ஐம்பத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று எழுபத்து ஐந்து சதம் எண்பத்து ஒன்பது (ரூ.90,359,375.89) பணத் தொகையின் மீது வருடாந்தம் நூற்றுக்கு பத்தொன்பது தசம் இரண்டு மூன்று (19.23%) வீதம் வட்டியும் கட்டணமும் மேற்படி மக்கள் வங்கி சட்டத்தின் 29(ஓ) பிரிவின் கீழ் அறவிடக்கூடிய பணத் தொகையும் அதன் பின்னர் ஏதேனும் ஒரு தொகை பணம் கிடைத்திருந்தால் அதைக் கழித்து அறவிட்டுக் கொள்ளும் பொருட்டு கொஹுவல, துட்டுகெமுணு வீதி, கல்தேரா பூங்கா 146/3, இலக்கமுடைய இடத்தில் வதியும் அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட் அவர்கள் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இத்தால் முன்மொழிந்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது

மேற்குறிப்பிட்ட அட்டவணை

1. இலங்கை குடியரசின் மேல் மாகாண கம்பஹா மாவட்டத்தில் ஹெய்யந்துடுவ சமுர்தி மாவத்தை, இலக்கம் 427 ஏ கொண்ட இடத்தில் மேற்படி ஈட்டு முறி தொடர்ச்சியாக இருக்கின்றபோது அந்த இயந்திரங்களைக் கொண்டு செல்லக்கூடிய அல்லது அகற்றிச் செல்லக்கூடிய ஏதேனும் வேறு வளாகத்தில் வைத்துள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரங்கள் அனைத்தும் அதாவது,

விபரம்	தொடர் இலக்கம்
1. BG 15#1051 - Base Machine	1051
2. SR 250 OVI Rall Machine	10SR00530001
3. MS Casing 1020 mm*10m 48 NO of MS Casing	PMMSC PR00091
4. Boring Tools	Rock Augur-1800mm dia Core Barel – 1800 mm dia Boring Bucket-1800mm dia and Desander RMT 250 1134
5. Roc Auger, Boring Buckets, Roller Core Barrel, Rock Auger, Roller Core Barrel,Boring Buckets	Rock Auger-1800mm dia-RA-HC2 Boring Buckets-1800mm dia-RB-HK2 Roller Core Barrel-1800mm dia --CR-HB Rock Auger 2000mm dia - dia-RA - HC2 Roller Core Barrel -2000mm dia- CR-HB Boring Buckets-2000mm dia - RB- HK2
6. MS Casing 1020mm*10mm*6m	PMMSC PR00091
7. Rock Augur,Core Barrel,Rock Bucket	Rock Augur-800mm dia - RAHC2 Core Barrel - 800mm dia - CRHB Rock Bucket - 800mm dia - RBHKI
8. Desander with capacity of 250M3/H	ZH200-250 & ZX 200-250

மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை

2. இலங்கை குடியரசின் மேல் மாகாண கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு 03 தபால் பெட்டி 166 புனித மைக்கல் வீதி, இலக்கம் 18 கொண்ட இடத்தில் மேற்படி ஈட்டு முறி தொடர்ச்சியாக இருக்கின்றபோது அந்த இயந்திரங்களைக் கொண்டு செல்லக்கூடிய அல்லது அகற்றிச் செல்லக்கூடிய ஏதேனும் வேறு வளாகத்தில் வைத்துள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரங்கள் அனைத்தும் அதாவது,

1. SANY Crawler Ctane SCC5550 (H.S. Code 8426910) - 01 Unit
2. Kelly Nar BK 40/394/3/39 along with standard accessories
3. One unit Bauer BG 28 on BS80 along with standard accessories

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி
.....
உதவிப் பொது முகாமையாளர் (அறவீடுகள்),
மக்கள் வங்கி அறவீடுகள் திணைக்களம்,
10வது மாடி, தலைமை அலுவலகக் கட்டிடம்,
இலக்கம் 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
கொழும்பு 2.
2019.05.14

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

பிரதம செயலாளர்
பிரதம செயலாளரின் அலுவலகம்,
கிழக்கு மாகாணம்.

விருப்பத்தெரிவுகளை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை.

புதிய வேலை வாய்ப்புகளை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் பொருளாதாரத்தை உயர் மட்டத்திற்கு இட்டு செல்லும் வகையில் கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டத்தின் ஒரு அம்சமாக ஆடைத் தொழிற்சாலைகளை மீள் கட்டமைப்புச் செய்ய உத்தேசிக்கப்பட்டதன் அடிப்படையில் எமது கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட திருக்கோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட சீதனவெளி ஆடைத் தொழிற்சாலையினை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள விருப்பத்தெரிவுகளை (Expression of Interest) வெளிப்டுத்தும் கோரிக்கைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

இதன் அடிப்படையில் இவ் ஆடைத் தொழிற்சாலையின் நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு ஆர்வம் உள்ள தனியார்/வணிக சமூகங்கள் தமது விருப்பத்தெரிவு-களை வெளிப்படுத்தும் விண்ணப்பத்தைப் பின்வரும் படிவத்திற்கு அமைவாக பூர்த்தி செய்து 2021/05/20 திகதிக்கு முன்பதாக இவ் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பம் செய்யும் மாதிரிப்படிவம்:

- **பெயர்:**
- **முகவரி:**
- **தொலைபேசி இலக்கம்:**
- **மின் அஞ்சல் முகவரி:**
- **தற்போது செய்து வரும் வியாபாரங்கள் தொடர்பான விபரங்கள்:**
- **ஆடைத் தொழிற்துறை தொடர்பான அனுபவம் மற்றும் அறிவு:**
- **வேறு விபரங்கள்:**

விபரங்களை
அனுப்ப வேண்டிய முகவரி.
தலைவர்,
கிழக்கு மாகாண பெறுகைக் குழு,
பிரதம செயலாளர் பிரதம செயலாளர் அலுவலகம்,
கிழக்கு மாகாணம்,
வரோதயா நகர், திருகோணமலை.

மேலதிக விபரங்களுக்கு.
பணிப்பாளர்,
மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களம்,
தொலைபேசி இல:- 026-2222492, தொலைநகல் இல:- 026-2223543
மின்னஞ்சல் னைரளவசநைள; நி.பழஎ.டம

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

மின் பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் மின் தூக்கியை பழுது பார்ப்பதற்கான கேள்வி அழைப்பு

அக்குறனை பிரதேச சபை

பிரதேச சபையின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மின் பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் மின் உற்பத்தியை பழுது பார்ப்பதற்காக கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு இத்தால் அழைக்கப்படுகின்றன. அதனோடு சம்பந்தப்பட்ட விபரங்கள் அட்டவணை இல.01 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

01. உங்களால் இப்பிரதேச சபையின் மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் மின் உற்பத்தியை பழுது பார்ப்பதற்காக எதிர்பார்ப்பின் நிபந்தனையுடனான இரு தொகுதிகளை கொண்ட விண்ணப்பத்தை கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கட்டணங்களை செலுத்தி 2021.04.20 முதல் 2021.05.07 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை செய்யும் அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை அக்குறனை பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். குறித்த மாதிரிகள் பற்றிய விபரங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

02. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட இரு தொகுதிகளை கொண்ட விண்ணப்பத்தை "தலைவர், அக்குறனை பிரதேச சபை, அலவத்துகொட" என்ற முகவரிக்கு 2021.05.10ஆம் திகதி மு.ப.10.00இற்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் கேள்வி விண்ணப்பத்தின் இடதுபக்க மேல் மூலையில் மின்பிறப்பாக்கி இயந்திரம்/மின் உயர்த்தியை பழுது பார்ப்பதற்கான கேள்விகளை சமர்ப்பித்தல் என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அத்தொகுதிகள் இரண்டையும் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வேறு வேறு உறைகளில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. சகல கேள்வி விண்ணப்பங்களும் 2021.05.10 மு.ப.10.00இற்கு கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் பற்றிய இறுதித்தீர்மானம் அக்குறனை பிரதேச சபையின் கேள்விச் சபைக்கு உரியது.

05. இது பற்றிய மேலதிக விபரங்கள் 066-2244387 தொ.பே இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை இலக்கம் 01

விபரம்	விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ.சதம்
மின்பிறப்பாக்கி இயந்திரம் பழுது பார்த்தல்	1000.00
மின் உயர்த்தி பழுது பார்த்தல்	1000.00

2021.04.20

(ஐ.எம்.இஸ்திஹார்)
தலைவர்
பெறுகைக்குழு
அக்குறனை பிரதேச சபை
அலவத்துகொட

கிழக்கின் குரல்

மட்டக்களப்பு பறங்கியாமடுவில் 43 வீடுகள் மக்களிடம் கையளிப்பு

மாவட்ட அரசாங்க அதிபர் பிரதம அதிதி

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

சிறு சிறு உதவிகளைச் செய்து விட்டு விளம்பரம் தேடும் இவ்வுலகில் பாரிய உதவியை செய்துள்ள "புதுவாழ்வும் புனர்வாழ்வும்" அமைப்பினரைப் பாராட்டுகிறேன், என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

கிரான் பிரதேசத்தில் மிகவும் பின் தங்கிய பறங்கியாமடுவில் 43 வீடுகளைத் திறந்துவைத்து மேலும் குறிப்பிடுகையில்,

புதுவாழ்வும் புனர்வாழ்வும் அமைப்பினர் மலேசியா தமிழர்பேரவை மற்றும் சர்வதேச மருத்துவ சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையோடு பறங்கியாமடுவில் மணல் குடிசைகளில் அடிப்படைவசதிகளற்று வாழ்ந்துவந்த 43 குடும்பங்களுக்கு வீடுகளையும், மலசல கூட மின்னிணைப்பு வாழ்வாதார வசதிகளையும் செய்து கொடுத்துள்ளனர்.

அந்த வீடுகளின் திறப்பு விழா புதுவாழ்வும் புனர்வாழ்வும் அமைப்பின் இலங்கைக்கான தலைவர் ஹென்றி அமல்ராஜ் தலைமையில் திங்கட்கிழமை (19) நடைபெற்றது.

விழாவில் புதுவாழ்வும் புனர்வாழ்வும் அமைப்பின் சர்வதேசத் தலைவர் கலா நிதி வேலாயுதம் சர்வேஸ்வரன், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில், கிரான் பிரதேச செயலாளர் ரி.ராஜ்பாபு, உதவிக் கல்விப் பணிப்பாளர், வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்டோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் மேலும் உரையாற்றுகையில்...

அடிப்படை வசதிகளற்று இன்றும் பல பிரதேசங்கள் எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்றன. அதனை இனங்கண்டு இவ்வமைப்பினர் இன்று எவ்வித விளம்பரமுமில்லாமல் செய்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அடிப்படைச்சேவைக்காக மாவட்டத் தலைவர் என்ற வகையில் மனதாரப் பாராட்டுகிறேன்.

இதற்கு கைமாறாக இக்கிராம மக்கள் செய்யவேண்டியது என்ன? நீங்கள் முதலில் உங்கள் காணியைச்சுற்றி வேலி அமைத்து வாழை நடுங்கள், பூக்கன்றுகள் நடுங்கள், அப்போது உங்கள் கிராமம் புன்னகையால் சிரிக்கும். உங்கள் வாழ்க்கைப்பாங்கு அடுத்தகட்டத்திற்கு நகர்ந்து செல்லும் என்பதில் ஐயமில்லை. விழாவில் பயனாளிகளின் வீடுகள் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டன.

விமர்சனம் என்பது கட்டணம் செலுத்தப்படாத விளம்பரம்

சபை அமர்வில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர்

(காரைதீவு குறூப் நிருபர்)

எம்மீதான விமர்சனத்தை வரவேற்கிறோம். விமர்சனம் என்பது கட்டணம் செலுத்தப்படாத விளம்பரம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. 20 இலட்சம் ரூபா கடனோடு பொறுப்பேற்ற சபையை இன்று 46 இலட்சம் ரூபா இருப்போடு வைத்துள்ளோம் .

இவ்வாறு காரைதீவு பிரதேச சபையின் 38ஆவது சபை அமர்விற்கு தலைமைவகித்துரையாற்றிய தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

மயானத்திற்குச் செல்வோரையும் பொலிசார் தலைக்கவசத்திற்காக பிடிக்கின்றனர் அதனை நான் செய்விக்கிறேன் என்றும் இங்கு கூறப்பட்டது. இந்தவாரம் மட்டும் காரைதீவில் 28 இலட்சம் ரூபா களவுபோயிருக்கிறது. ஆங்காங்கே கஞ்சா, சாராயம் விற்கப்படுவதாக தகவல்கள் கிடைக்கின்றன. இந்நிலையில் சட்டத்திற்கு மதிப்பளித்து எமது பாதுகாப்பையும் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

ஒரு கட்சியியின் அமைச்சரொருவருக்கு பகிரங்கமாக அமைப்பாளராக விருக்கும் ஊடகவியலாளரொருவர் எமது சபைக்குவராமலே பொய்யான செய்தியை போட்டு எமக்கு சேறுபூச முனைந்துள்ளார்.

இருப்பினும் அவரை மன்னித்து விட்டோம். ஆனால் ஒரு கட்சியின் அமைப்பாளரான அவரை ஊடகவியலாளராக நாம் அனுமதிக்க முடியாது.

எந்தக்கஸ்டம் வந்தாலும் மக்களுக்கு சேவையாற்றுவதே எனது பணி. உங்களுக்கு பிடிக்கவில்லையென்றால் எழுத்துமூலம் அறிவித்தால் விடைபெற நான் தயார் என்றார்.

டெங்கை கட்டுப்படுத்த புகை விசிறல்

(மட்டக்களப்பு விசேட நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபைப் பிரிவினுள் அதிகரித்து வரும் டெங்கு தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் புகை விசிறல் மற்றும் தொற்று நீக்கல் நடவடிக்கைகள் ஞாயிற்றுக்கிழமை (18) மேற்கொள்ளப்பட்டன.

மாநகர சபைப் பிரதேசத்தினுள் டெங்கின் தாக்கம் கட்டுப்பாட்டிற்குள் உள்ள நிலையிலும் வாராந்தம் 10 பேர் இனங்காணப்படுவதால் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி கே. கிரிசுதன் தெரிவித்தார்.

சுகாதாரத் துறையினர் டெங்கு நுளம்பின் தாக்கத்தைக் கட்டப்படுத்தும் வகையில் நுளம்புகள் பரவும் இடங்களை வைத்திருக்காமல் உதவுமாறு பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் நடவடிக்கை

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றும் ஆசிரியர்களின் தொழில் சார் தேவைகளை பூர்த்தி செய்யும் பணியில் மாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நியமனம் உறுதிப்படுத்தப்படாத ஆசிரியர் விபரங்கள் கோரப்பட்டு கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.அப்துல் நிசாம் தெரிவித்துள்ளார்.

ஆசிரியரொருவர் ஓய்வூதியம் பெறும்போது நிரந்தர நியமனம் உறுதிப்படுத்தல் கடிதம் இல்லாத காரணத்தினால் பல கஷ்டங்களை எதிர்கொள்வதை கருத்தில் கொண்டே இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கந்தளாயில் முருங்கை கன்று விநியோகம்

(முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் ஜீவா துரு உதயனாய வேலைத்திட்டத்தின் கீழ் கந்தளாயில் அமைந்துள்ள ஸ்ரீ போதி மண்டபத்திற்கான கலசம் அமைத்தலும் ஒரு இலட்சம் முருங்கை கன்று விநியோகிக்கும் வேலைத்திட்டமும் ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரலவின் தலைமையில் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு முருங்கை மரக்கன்று வீதம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலாளர் திரு சமன் தர்ஷனா பாடிகோரலா, கந்தளாய் பிரதேச சபை தவிசாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் விவசாய அதிகாரிகள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கட்டணம் செலுத்தாதோரின் மின் இணைப்பு துண்டிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

இலங்கை மின்சார சபையின் கல்முனைப் பிராந்திய மின் பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மாதாந்த மின் கட்டணத்தை செலுத்தாத மின் பாவனையாளர்களின் மின் இணைப்பு துண்டித்தல் தொடர்பான சிவப்பு அறிவித்தல் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளரால் விடுக்கப்பட்டுள்ளது.

மின் விநியோகம் துண்டித்தல் தொடர்பான சிவப்பு அறிவித்தல் மின்சாரக் கட்டணம் நிலுவையிலுள்ள மின் பாவனையாளர்களுக்கு மின்மானி வாசிப்பவர்களூடாக விநியோகிக்கப்படுகின்றது.

கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், மாளிகைக்காடு, ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச மின் பாவனையாளருக்கே இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்திற்கும் மேலான கட்டணத்தை கொண்டிருப்பவர்களின் மின் துண்டிப்பு செய்யப்படவுள்ளதோடு, அவ்வாறு இணைப்பு துண்டிக்கப்படுமிடத்தில் மீள் இணைப்பை ஏற்படுத்துவதற்காக மின் நிலுவைக் கட்டணம், தண்டப்பணம் மற்றும் மீள் இணைப்புக் கட்டணம் என்பன செலுத்த வேண்டுமென சிவப்பு அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்த மின்சாரப் பட்டியலில் காணப்படும் நிலுவையினை உடனடியாக செலுத்தி மின் துண்டிப்பை தவிர்த்துக் கொள்ளுமாறு மின் பாவனையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர். மின் இணைப்பு துண்டிக்கப்படும் இடத்து மேலதிகமாக 1 250 ரூபாய் செலுத்த வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மின் துண்டிக்கப்பட்டு 03 மாதங்களுக்குள் மீண்டும் மின்சாரத்தை பெற்றுக் கொள்ளாவிடின் உரிய இடத்திலுள்ள மின் மானியுடன் ஏனைய இலங்கை மின்சார சபையின் உபகரணங்களும் அகற்றப்படுமெனவும், அவ்வறித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(தோப்பூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் தோப்பூர் சின்னக்கலுவான் பாலத்தின் அருகாமையில் செல்லுகின்ற பிரம்புவெளி விவசாய வீதியை புனரமைத்துத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் வீதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாது மிக மோசமாக சேதமடைந்து குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

மாரிகாலத்தில் இவ்வீதியூடாக பயணிக்கமுடியாது மக்கள் சிரமப்படுகின்றனர். இதனால் இவ்வீதியூடாக சென்றுவருகின்ற பொதுமக்கள், விவசாயிகள், மாணவர்கள் சிரமப்படுவதாக கூறுகின்றனர்.

இவ் வீதியானது பள்ளிக்குடியிருப்பு மக்கள் தோப்பூர் ஊடாக பள்ளிக்குடியிருப்பிலிருந்து மூதூர் சென்று வருவதற்கான தூரத்தை விட குறைந்த தூரத்தைக் கொண்ட இலகுவான குறுந்தூர வீதியாகவும் இது உள்ளது.

இதனை கருத்திற்கொண்டு இவ்வீதியை புனரமைத்துத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாடுகளின் உரிமையாளர்களுக்கு நீதிமன்றத்தினூடாக சட்ட நடவடிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

திருக்கோவில் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கவனிப்பார் அற்றுக் காணப்படும் கட்டாக்காலி மாடுகளை பிடித்து அதன் உரிமையாளர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, திருக்கோவில் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்.எஸ். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

கட்டாக்காலி மாடுகள் விளையாட்டு மைதானம், வர்த்தக நிலையங்கள், நிறுவனங்கள் போன்றவற்றை அசுத்தப்படுத்தி வருவதோடு மக்களுக்கு பெரும் அசௌகரிகங்களை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இரவு, பகலாக வீதிகளில் திரிவதால் வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுவதோடு, பயிர்ச் செய்கைக்கும் பெரும் சேதங்களை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

பிரதேச சபையின் தீர்மானத்திற்கு அமைவாக பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து கட்டாக்காலி மாடுகளை பிடிக்கும் நடவடிக்கையை ஞாயிற்றுக்கிழமை (18) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பிடிக்கப்படும் மாடுகளின் உரிமையாளர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்கள் ஒரு நாளைக்குள் உரிமைகோராத பட்சத்தில் நீதிமன்றினூடாக மாடுகளை அரச உடமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, மாடு வைத்திருக்கும் உரிமையாளர்கள் தத்தமது மாடுகளை உரிய முறையில் பாராமரிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

சேவை நலன் பாராட்டு விழாவும் கௌரவிப்பும்

(கல்முனை சுழற்சி நிருபர்)

கிழக்கு மாகாண ஓய்வுநிலை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருமான எம். சி. எம். சரிப் சேவையிலிருந்து இளைப்பாறியதை முன்னிட்டு கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட சேவைநலன் பாராட்டு விழாவும், கௌரவிப்பும் கடந்தவாரம் கல்முனை கூட்டுறவு தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கமலாதேவி உதயராஜா தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் பாராட்டு மடலும் பொற்கிளியும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

விழாவில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். எம். ஜுனைதீன் தலைமைக் காரியாலய தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ. பரீட், ஏ.எம். ஷாபி, கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், உப தலைவர்கள் பொது முகாமையாளர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

லொறி - ஆட்டோ விபத்து; நால்வர் படுகாயம்

(கந்தளாய் தினகரன் நிருபர்)

திருகோணமலை கண்டி பிரதான வீதியில் லொறியொன்றும் முச்சக்கர வண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் பலத்த காயங்களுடன் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் திங்கட்கிழமை (19) மாலை இடம்பெற்றதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கிறனர்.

கந்தளாயிலிருந்து தம்புள்ளைக்கு முச்சக்கர வண்டியில் சென்ற நால்வரே பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குருணாகலையிலிருந்து திருகோணமலைக்கு ஓடுகளை ஏற்றிச் சென்ற லொறியே இவ்வாறு முச்சக்கர வண்டியுடன் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

லொறியின் சாரதியை கைது செய்துள்ளதோடு விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம் மே 17 இல்

மாகாண கல்விப் பணிப்பாளர்

பெரியநீலாவணை தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம் மே 17ஆம் திகதி இடம்பெறுமென மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிசாம் தெரிவித்துள்ளார்.

மாகாணக் கல்விப் பணிமனையில் திங்கட்கிழமை (19) இடம்பெற்ற வலயங்களுக்கிடையிலான இடமாற்றத்திற்கான மேன்முறையீட்டு சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் பாடசாலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் முஸ்லிம் பாடசாலைகளுக்கு நோன்பு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இடமாற்றம் செய்யும் போது நிர்ணயிக்கப்பட்ட திகதியில் சகல தரப்பினரும் கடமையை பொறுப்பேற்க முடியாமல் போய்விடும் என்பதனாலேயே இத் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.ஆசிரியர் சமூகத்திற்கு பாதிப்பில்லாத வகையில் மேன்முறையீட்டினை மேற்கொள்ளுமாறும் இதன்போது மாகாண பணிப்பாளர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச செயலக ஒருங்கிணைந்த பிரதேச ஆயுர்வேத பாதுகாப்பு சபையினரின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தையடுத்து வைத்தியர்கள் ஒன்றுசேர்ந்து எடுத்துக் கொண்ட படம். இதில் தலைவர் வைத்தியர் எம்.ஏ.எம். நஹீம், செயலாளர் வைத்தியர் எம்.எஸ்.வீ.எம். மர்சூக், பொருளாளர் வைத்தியர் எம்.எம். முபாரக் ஆகியோர் மத்தியில் காணப்படுகின்றனர்.

(படம்:அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

உயிரை கையில் பிடித்துக் கொண்டு ஆற்றை கடக்கும் கர்கஸ்வோல்ட் தோட்ட மக்கள்

15 வருடங்களாக தொடரும் அவலம்

ஹற்றன் விசேட நிருபர்



பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு போக்குவரத்து, பாலம், நீர் வடிகால் அமைப்பு உட்பட அடிப்படை வாழ்க்கை வசதிகள் அத்தியாவசியமானதாகும். எனினும் மலையகத்தில் பெரும்பாலான பகுதிகளில் வாழும் மக்கள் இன்னும் இத்தகைய அடிப்படை வசதிகள் இன்றி பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

அந்தவகையில் நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பொகவந்தலாவ டின்சின் கர்கஸ்வோல்ட் தோட்டப் பகுதியில் வாழும் மக்கள் மிகவும் பழமையான பழுதடைந்த நிலையில் உள்ள பாலத்தினையே பயன்படுத்தி வருகின்றனர். சுமார் 100 குடும்பங்களைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட மக்கள் இந்த பாலத்தினை பயன்படுத்தி வருகின்றனர். எனினும் இந்த பாலமானது தற்போது மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதோடு எந்த நேரமும் உடைந்து விழும் அபாயத்திலுள்ளது இதனால் தினமும் இந்த பாலத்தால் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் உட்பட அனைவருக்கும் மிகவும் மோசமான ஆபத்தை ஏற்படுத்தக் கூடியதாக பாலம் இருக்கின்றது.

தங்களது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள உயிரை கையில் பிடித்துக்கொண்டு பாலத்தினை கடப்பதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாலம் உடைந்த போனதன் காரணமாக பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் மற்றுவழியை பயன்படுத்துகின்றனர். அப்பாதையில் செல்ல அதிக நேரம் எடுப்பதால் சில சமயங்களில்

ஆபத்தினையும் உணராது உடைந்த இந்த பாலத்தினையே பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் பயன்படுத்தி வருகின்றனர்.இந்த பாலத்தில் பயணித்து பலர் தவறி விழுந்து காயங்களுக்கும் உள்ளான சந்தர்ப்பங்களும் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் காலங்களில் பலர் வாக்குறுதிகள் வழங்கிய போதிலும் எவரும் செய்து கொடுக்கவில்லை. முன்னாள் அமைச்சர் திகாம்பரம் 15 லட்சம் ரூபா செலவில் இதனை அமைத்து தருவதாக அடிக்கல் நாட்டியதாகவும் ஆனால் இதுவரை பாலம் புனரமைக்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அமரர் ஆறுமுகன் தொண்டமானும் குறித்த பாலத்தினை புனரமைப்பு செய்து தருவதாக அடிக்கல் நாட்டி வைத்ததாகவும் ஆனால் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஒற்றயடி பாதையில் அமைந்துள்ள இப்பாலம் கடந்த 15 வருடங்களாக உடைந்து கிடப்பதனால் இங்கு வாழும் சுமார் 300 மேற்பட்ட மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர். எனவே இது குறித்து உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு உடனடியாக இப்பிரச்சினைகக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளுக்கு மதிப்பீட்டு சான்றிதழ்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அரச பாடசாலைகளின் சிற்றுண்டிச்சாலைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அவற்றை தரப்படுத்தி சான்றிதழ் வழங்க மாவட்ட சுகாதார திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கிணங்க மாவட்டப் பாடசாலைகளின் சிற்றுண்டிச்சாலைகள் தரப்படுத்தப்பட்டு அவற்றின் செயற்பாடுகள் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்குள்ளிகள் வழங்கவும் அப்புள்ளிகளுக்கிணங்க அவற்றை ஏ.பி.சீ.என வகைப்படுத்தி சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு போஷாக்கு மற்றும் சுத்தமான உணவுப் பொருட்களை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கம் என இரத்தினபுரி மாவட்டப் பிரதான பொது சுகாதார திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பாடசாலை நிர்வாகங்கள் மேற்படி சிற்றுண்டிச்சாலை முறையாக வசதியாக நடத்துவதற்கான அறிவுரை ஆலோசனைகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸ் விடுதி மீது பாரிய மரம் வீழ்ந்து சேதம்

கம்பளை நிருபர்

கம்பளை, பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்கும் விடுதி மீது நேற்று அதிகாலை பாரிய பலா மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் பொலிஸ் விடுதியின் கூரை கடுமையாக சேதமடைந்துள்ளது. பொருட்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. எனினும், தெய்வாதீனமாக எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை.

விடுதியில் தங்கியிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

கம்பளை பொலிஸ் நிலையம் அமைந்துள்ள இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவிலேயே விடுதி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொகவந்தலாவ பொகவான தோட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

நாளொன்றுக்கு 20 கிலோ பச்சைத்தேயிலை கொழுந்து பறிக்க வேண்டுமென அழுத்தம் கொடுக்கும் நிர்வாகத்திற்கு எதிராக பொகவந்தலாவ பொகவான தோட்ட தொழிலாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொகவந்தலாவ குயினா தோட்ட பிரதான வீதியின் பொகவான சந்தியிலேயே நேற்று காலை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்ததாவது..

இதுவரை காலமும் 15 கிலோ பச்சைத்தேயிலை பறித்தோம். ஆனால் 1000 ரூபாய் சம்பள அதிகரிப்பின் பின்னர் 20 கிலோ பச்சைக் கொழுந்து நாளொன்று பறிக்க வேண்டும் என தோட்ட நிர்வாகம் அழுத்தம் கொடுக்கின்றது. அவ்வாறு 20 கிலோ கொழுந்து பறிக்காவிட்டால் வாரத்தில் 03 நாட்களே வேலை வழங்கப்படும் என அச்சுறுத்தலும் விடுக்கின்றது. இதுவரை வழங்கி வந்த சுகாதாரம் சம்பந்தமான சலுகைகளும் குறைக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

அரசாங்கம் ஆயிரம் ரூபாய் நாட் சம்பளம் வழங்கியமைக்கு நன்றி தெரிவிப்பதோடு அத்தியாவசிய விலை உயர்ரவினாலே ஆயிரம் ரூபாய் சம்பளவுயர்வை கோரினோம். ஆனால் இப்போது பச்சைக்கொழுந்து அதிகளவில் பறிக்க வேண்டுமென தோட்ட நிர்வாகங்கள் அழுத்தம் கொடுக்கின்றது, ஆகவே நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், தொழிலமைச்சர் மற்றும் மலையக பிரதிநிதிகள் தோட்ட கம்பனிகளுடன் கலந்துரையாடி உரிய தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும் என தெரிவித்தனர்.

இது தொடர்பில் தோட்ட முகாமையாளரிடன் தொடர்பு கொண்டு கேட்ட போது தற்போது தேயிலை கொழுந்து அதிகளவில் காணப்படுகிறது. ஆகவே தான் கொழுந்து பறிக்கும் அளவை அதிகரிக்க கோரினேன். தேயிலை செடிகளில் வளர்ந்திருக்கும் பச்சைக்கொழுந்தினை வீணாக வெட்டி வீச முடியாதெனவும் அவர் குறிப்பிட்டார்.

சுமார் 300 தொழிலாளர்கள் வரை இந்த ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் கலைந்து சென்றனர் .

நுவரெலியா மாநகர சபையின் ஏற்பாட்டில் ஏப்ரல் வசந்த காலத்தை முன்னிட்டு நுவரெலியா விக்டோரியா பூங்காவில் கடந்த 17, 18 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட மலர் கண்காட்சியின் பரிசளிப்பு வைபவம் அண்மையில் நுவரெலியா மாநகர முதல்வர் சந்தன லால் கருணாரட்ன தலைமையில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நுவரெலியா மாவட்ட. பாராளுமன்ற. உறுப்பினர் நவீன் திஸாநாயக்க உட்பட மாநகரசபை உறுப்பினர்கள் கலந்துக்கொண்டு மலர் கண்காட்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். (படம்: நுவரெலியா தினகரன் நிருபர்)

தேர்தல் முறைமை குறித்து சிறுபான்மை கட்சிகளுடன் இ.தொ.கா கலந்துரையாடல்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

"தேர்தல் முறைமை தொடர்பில் அனைத்து சிறுபான்மை கட்சிகளிடமும் ஆலோசனைகள் பெறப்படும். அதன்பின்னர் எமது திட்டம் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்று (20.04.2021) தெரிவித்தார்.

சுய தொழில் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் நுவரெலியா பருவகால கொள்வனவு தொகுதியில் பிரஜா ஷொப்பிங் விற்பனை குடில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் நேற்று (19) அலரிமாளிகையில் நடைபெற்றது.

இதன்போது மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தும் முறைமை தொடர்பில் அரசாங்கத்தால் இரு யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

மேற்படி யோசனைகள் சிறுகட்சிகளுக்கு பாதகமாக அமையும் என்பதால் அவற்றை இ.தொ.கா. நிராகரித்திருந்தது. இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு கூறினார்.

"சிறுபான்மையின மக்களுக்கு எதிராக திட்டம் முன்வைக்கப்படவில்லை. அரசாங்கத்தின் தரப்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டு அவை குறித்து எமது அபிப்ராயம் கோரப்பட்டது. அதன்போது திட்டங்களை ஏற்க முடியாது என நாம் குறிப்பிட்டோம். இதனையடுத்து எமது திட்டத்தை முன்வைக்குமாறு கோரினர். எனவே, இன்னும் ஒரிரு நாட்களில் அனைத்து சிறுபான்மையின கட்சிகளையும் தொடர்புகொண்டு, நியாயமான திட்டத்தை முன்வைப்போம். " என்றார்.

சுய தொழில் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் தலைமையில் நுவரெலியா பருவகால கொள்வனவு தொகுதியில் பிரஜா ஷொப்பிங் விற்பனை குடில் நேற்று (20.04.2021) ஆரம்பித்து வைக்கப்பட்ட பாதே எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: ஹற்றன் சுழற்சி)

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 ஏப்ரல் 21
புதன்கிழமை

யாழில். ஏழு பேருக்கு கொரோனா உறுதி

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 7 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை திங்கட்கிழமை (19) கண்டறியப்பட்டுள்ளது என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் மருத்துவர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வு கூடத்தில் 350 பேரின் மாதிரிகள் திங்கட்கிழமை பரிசோத னைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 7 பேருக்கு தொற்று உள்ளமை கண் டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் சுயதனிமைப் படுத்தலில் உள்ளவர்கள். ஏனைய நால்வர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களாவர்.

அதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப் படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கோரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ள தாகவும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

அச்சுவேலி கோழி பண்ணையில் 15,000 முட்டைகளை ஒரே நேரத்தில் பொறிக்கவைக்கும் ' இங்குபேட்டர் ' இயந்திரத்தை வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நாடாவை வெட்டி ஆரம்பித்து வைப்பதை படங்களில் காணலாம். இந் நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் மற்றும் விவசாயத்துறை சார் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சொந்த மண்ணில் சேவையாற்ற கிடைத்தமை பெரும் பாக்கியம்

பட்டதாரிகளுக்கான நியமன நிகழ்வில் ஆளுநர் சார்ள்ஸ்

ஜனாதிபதியின் கொள்கை திட் டங்களுக்கமைய பட்டதாரி மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கு பல்வேறு நியமனங்கள் நாடளாவிய ரீதியில் இன்று வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில்

இன்று வழங்கப்படும் நியமனங்க ளும் அரசசேவையின் தேவைப்பாட் டின் அடிப்படையில் வழங்கப்பட் டுள்ளதோடு சொந்த மாகாணத்தில் சேவையாற்ற கிடைத்த சந்தர்ப் பத்தை பாக்கியமாக கருதி மனநி லையை தயார்படுத்திக் கொண்டு வடக்கு மாகாண மக்களுக்கு சிறப் பாக சேவையாற்ற முன்வர வேண் டுமென வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சேவையில் பட் டதாரிப் பயிலுனர்களாக நியமிக்கப் பட்டவர்களில் 361 பேருக்கு அபி

விருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு வட மாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம் சார்ள்ஸ் தலைமையில் ஆளுநர் செயலக மாநாட்டு மண்ட பத்தில் (19) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். தொடர்ந்து அவர் உரை யாற்றுகையில்,

முன்னைய காலங்களை போலன்றி தற்போது அனைத்து வகையான மக்களின் தேவைப்பாடு களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆயினும் மக்களின் மனநிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

மாகாணசபையின் சேவையினு டைய தேவை அடிப்படையில் முகாமைத்துவ சேவை நிறுவனத் தால் வழங்கப்பட்ட சிபார்சிற்க மைய இந் நியமனங்கள் வழங் கப்பட்டுள்ளன. அந்த வகையில் விசேட தேவை உள்ளவர்களுக்கு மட்டும் தற்காலிக அடிப்படையில் அண்மைய இடங்களுக்கு நியம னம் வழங்கப்பட்டுள்ளது. எனவே சொந்த மாகாணத்தில் சேவையாற்ற கிடைத்த சந்தர்ப்பத்தை பாக்கிய மாக கருதி மனநிலையை தயார்ப டுத்தி வடக்கு மக்களுக்கு சிறப்பாக சேவையாற்ற இன்று நியமனம் பெற்ற அனைத்து அபிவிருத்தி உத் தியோகத்தர்களும் தயாராக வேண் டுமெனவும் ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் உதவிச் செயலாளர் , பிரதி பிரதம செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செய லாளர், திணைக்கள தலைவர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோக சேவையின் நிரந்தர நியமனங்களில் இணைக்கப்பட்டோரும் கலந்து கொண்டனர்.

முல்லையில்

சட்டவிரோத மீன்பிடி முறையை பயன்படுத்துவோரைக் கட்டுப்படுத்த திட்டம்

அமைச்சர் டக்ளஸ் தலைமையில் தீர்மானம்

முல்லைத்தீவு கடற்பரப்பில் வெளிச்சம் பாய்ச்சி கடற்றொழி லில் ஈடுபடுவதை கட்டுப்படுத்து வதற்கு விசேட பொறிமுறை உரு வாக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், கடற்படை மற்றும் கடற்றொழில் பரிசோதகர் கள் இணைந்த கடற்கண்காணிப்பு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து தடை செய்யப்பட்ட தொழில் முறையான வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடியில் ஈடுபடுகின் றவர்களுக்கு எதிராக சட்ட நடவ டிக்கை மேற்கொள்வதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கடற் படையின் கிழக்கு மாவட்ட தளபதி றியர் அட்மிறல் வை.எம். ஜெய ரத்ன, கடற்றொழில் திணைக் களத்தின் உதவிப் பணிப்பாளர் கலிஸ்ரன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத் தலைவர் ஜோன்ஸன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் சமேள னத்தின் தலைவர் நிக்ஸன் ஆகியோ ருக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே குறித்த தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுற்ளது.

வெளி மாவட்டங்களில் இருந்து முல்லைத்தீவு கடற்பரப்பினுள் நுழைகின்ற கடற்றொழிலாளர்கள் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடியில் ஈடுபடுவதன் காரணமாக முல்லைத் தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கள் பாதிக்கப்படுவதாக, தொடர்ச் சியாக கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில், உடனடியாக நடைமு றைப்படுத்தும் வகையில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈஸ்டர் தாக்குதல்

இரண்டாம் வருட நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில்

ஈஸ்டர் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்றைய தினம் யாழ்ப்பாணம் மரியன்னை ஆலயத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாண மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்;

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையில் தென் பகுதியில் பல இடங்களில் நடை பெற்ற தொடர் குண்டு தாக்குதலில் மரணமடைந்த பாதிப்படைந்த மக் களுக்கான இரண்டாவது ஆண்டு நிகழ்வு இன்று புதன்கிழமை 21 ஆம் தேதி அனுஷ்டிக்கப்படவுள் ளது.

கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயம் கட்டுவப் பிட்டி செபஸ்தியார் ஆலயம், மட் டக்களப்பு சீயோன் தேவாலயம் மற்றும் கொழும்பில் இருக்கின்ற உல்லாச விடுதிகள் இவைகளில் இடம்பெற்ற பயங்கரமான குண்டு வெடிப்பிலே நூற்றுக்கணக்கான மக்கள் குறிப்பாக கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள். பலர் அங்க வீனமானார்கள் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இதனுடைய இரண்டாவது ஆண்டு நினைவை நாடு முழுவதும் அனுஷ்டித்து இறந் தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுச ரணையினையும் வெளிப்படுத்த வேண்டும் என்று கொழும்பு உயர் மறைமாவட்ட கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அழைப்பு விடுத் திருக்கின்றார்.

இதன்படி இன்றைய தினம் எங் களுடைய யாழ் மறை மாவட்டத் தில் உள்ள ஆலயங்களில் 08:45 க்கு ஆலயமணி ஒலிக்கப்பட்டு மௌன அஞ்சலிகள் இடம்பெறவுள்ளன.

கிங்ஸ்டன் பாராளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடல்

தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக லிபரல் டெமக் ராட்டி கட்சி தலைவரும், கிங்ஸ்டன் பகுதி பாராளு மன்ற உறுப்பினருமான எட் டேவி அவர்களுடனான கலந் துரையாடல் ஒன்று நடைபெற் றுள்ளது.

கௌசிகன் சசிகுமாரின் ஒருங்கிணைப்பில் செயற் பாட்டாளர்களான கிறிஸ்ரி நிலானி காண்டீபன், குண ரெத்தினம் யுவராஜ், அனோஜன் சிவ பாலன், கீதரன் ராசேந்திரா, சசிகரன் செல்வசுந்தரம், விஜய் விவேகானந் தன், சதீஸ் குலசேகரம், விநோதன் கனகலிங்கம், சைலேசன் சிதம்பர நாதன், சதேந்லொயிற்றன் புயலீந்தி ரன், கதாகாரன் நாகராஜா, யதுகுலக் கண்ணா ரவிநாதன் ஆகியோர் சூம் செயலி ஊடாக கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் பிராதான பேச்சா ளராக யோகலிங்கம் சொக்கலிங் கம் மற்றும் நிமலன் சீவரத்தினம் ஆகியோர் தமிழ் மக்கள் சார்பாக கருத்துக்களை பாராளுமன்ற உறுப்பி னரிடம் எடுத்து கூறியிருந்தனர்.

வவுனியா வளாக ஊழியர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

ஓமந்தை விஷேட நிருபர்

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் பணிபுரியும் பராமரிப் புப் பிரிவு ஊழியர்கள் 22பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

வவுனியா வளாகத்தில் பணிபுரியும் மதவாச்சியை சேர்ந்த ஊழியர் ஒரு வருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்ததையடுத்து குறித்த ஊழியர் பணிபுரியும் பராமரிப்பு பிரிவை சேர்ந்த 22 பேருக்கு பி.சி. ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட் டுள்ளதுடன், அவர்கள் தற்காலிகமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்று உறுதிசெய்யப்பட்ட குறித்த ஊழியர் கடந்த 9 ஆம் திக திக்கு பின்னர் பணிக்கு வரவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சியில் 150 கிலோ கஞ்சா பொதிகள் மீட்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரி விற்குட்பட்ட பள்ளிக்குடா பகுதி யில் பொலிஸ் விசேட அதிரடிப்ப டையினரால் ஒரு தொகை கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி விசேட அதிரடிப்ப டையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இவை மீட்கப்பட் டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்ற னர்.

யாழ். மன்னார் வீதிக்கு அண்மித்த பகுதியில் உள்ள பற்றை ஒன்றில் இவ்வாறு மறைத்து வைக்கப்பட்டி ருந்த பொதிகளை நேற்று அதிகாலை சோதனையிட்ட போதே இவை மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் சுமார் 150 கிலோ எடையை உடையதாக இருக்கும் என நம்பப்படுகிறது. மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளை விசேட அதிர டிப்படையினர் எடுத்து சென்றுள்ள நிலையில் விசாரணைகளின் பின்னர் மேலதிக விசாரணைகளிற்காக வும், நடவடிக்கைக்காகவும் பூநகரி பொலிசாரிடம் ஒப்படைக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும், மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை வாசல் வரை வாகனங்கள் செல்வதால்

மாணவர்களுக்கு பல்வேறு இடையூறு; பெற்றோர் விசனம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தின் கேட்போர் கூடத்திற்கு அரு கிலுள்ள பாடசாலை வாசல் வரையில் வாகனங்கள் செல்வ தற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள தால் மாணவர்களுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுவதாகவும் மாணவர்களை பாடசாலைக்கு அழைத்து செல்லும் பெற்றோர் கள் விசனம் தெரிவிக்கின்றனர் .

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்திற்கு இரண்டு பிரதான வாசல்கள் காணப் படுகின்றன. இவ் வாசலினால் மாண வர்கள் இரு பிரிவுகளாக சென்று வருகின்றனர். ஆரம்பபிரிவு மற்றும் உயர் தர மாணவர்கள் இவ்வாறு சென்று வருகின்றனர். எனினும் இரண்டாம் வாசலான கேட்போர்கூ டத்தின் பிரதான வாசலினால் ஆரம் பப்பிரிவு மாணவர்களை அழைத்து செல்லும்போது குறித்த வாசல் வரை வாகனங்களில் மாணவர்களை அழைத்து செல்லப்படுகின்றனர் .

இந்த நடைமுறை முன்னர் நிறுத்தி வைக்கப்பட்டு மாணவர் கள் பிரதான வீதியில் இறக்கிவி டப்பட்டு நடந்து வாசல்வரை யும் சென்றபோது அப்பகுதியில் வாகன நெரிசல் இடையூறுகள் ஏற் படவில்லை. ஆனால் தற்போது அந்நடைமுறை முற்றிலுமாக மீறப்பட்டுள்ளதுடன் அப்பகுதி யில் வாகன நெரிசல் ஏற்படுகின் றது.

அத்துடன் மாணவர்களை அழைத்து செல்லும் பெற்றோர்க ளுக்கும் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன. இதனால் விபத்துக் களும் ஏற்படுகின்றன. இதுவிடயத் தில் சம்பந்தப்பட்டோர் கவனம் செலுத்த வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

வாகன விபத்தில் யாசகர் பலி

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியில் (19) இரவு இடம் பெற்ற விபத்தொன்றில் வீதியில் சென்ற யாசகர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார்.

கண்டியைச் சேர்ந்த சிவராசா (38) என்பவர் முள்ளியவளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு பகு திகளில் யாசகம் பெற்று வந்துள் ளார்.

குறித்த தினம் இடம்பெற்ற விபத்து ஒன்றின் போது காய மடைந்த நிலையில் வீதியில் விழுந்து கிடந்துள்ளார். முல் லைத்தீவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரி ழந்துள்ளார்.

அர்ப்பணிப்பு மிகு ஆளுமைக் கலைஞன் T.S.றஜித்

கலைஞர்கள் பலரையும் தந்த வரலாற்றுச் சிறப்பு மிகு சுதுமலை மண்ணிலிருந்து கடந்த பத்தாண்டுகளாக பாடல்கள், நடிப்பு, குறும்படங்கள், நாடகங்கள் என பல்துறை சார் கலைஞனாய் அறியப்பட்டவர் றஜித். சிறுபராயம் முதலே கலைத்துறை ஈடுபாடு மிக்க ஒருவராய் விளங்கிய இவர் தனது பள்ளிக்காலத்தில் சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல்க் கல்லூரி ஆகியவற்றில் மேடை நாடகங்களை எழுதி இயக்கி இருக்கிறார்.

எழுத்துத் துறை சார்ந்து மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் ஈழ பக்திப் பாடல் என்ற சிறப்பு மிகு தளத்தில் இன்று நன்கறியப்பட்ட ஒருவராகவும் மிளிர்கிறார். 2012ஆம் ஆண்டு ஈழபக்திப் பாடல் துறையில் ஒரு பாடலாசிரியராக நுழைந்த றஜித் சுதுமலை அச்சாட்டி வைரவர் ஆலயம் மீது பாடப்பெற்ற 'அப்பனே வைரவா' என்ற இசைத் தொகுப்பின் வாயிலாக நன்கு அறியப்படத் தொடங்கினார்.

தன்னுடைய முதலாவது இறையிசைப் பாடலையே தாயகத்தின் பிரபல பாடகர் S.G சாந்தன் பாடியதை மிகவும் நெகிழ்ச்சியோடு கூறுகின்றார். 2012 தொடங்கிய இவரது பாடல் பயணத்தில் இவர் இணுவில், சுதுமலை, பண்டத்தரிப்பு, கோண்டாவில் என அனைத்து பிரதேச ஆலயங்களிற்கும் பல இறுவட்டுக்களை உருவாக்கினார். தன்னைப் பாடல் உலகிற்குக் கொண்டு வருவதற்கான உந்துதலைத் தந்தவர் தனது மண்ணைச் சேர்ந்த சக பாடலாசிரியர் தினேஷ் ஏகாம்பரம் என்பதையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார் றஜித்.

தென்னிந்திய இசையமைப்பாளர் அக்னி கணேஷின் இசையில் அந்நாளில் றஜித் உள்ளிட்ட பல கலைஞர்கள் பல இசைப்படைப்புகளை மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக உமா சதீஷ், தினேஷ் ஏகாம்பரம், கௌரீஷன் போன்றவர்கள் பல படைப்புகளை சமகாலத்தில் மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக தாயகப் பாடகரான எஸ்.ஜி. சாந்தனின் பல பாடல்கள் அந்நாளில் இவர்களது உருவாக்கத்தில் வெளியீடு கண்டன. தாயகத்தின் பிரபல இசையமைப்பாளர்களான அருணா கேதீஸ், சுதர்சன் போன்றவர்களும் இவர்களது பல பாடல்களை இசையமைத்துள்ளனர்.

பக்திப் பாடல் தளத்தில் இதுவரை நிலையான பாடல்களை எழுதியிருக்கின்ற றஜிதின் பல பாடல்கள் இன்றைக்கும் பிரசித்தம் பெற்ற பாடல்களாக

வெற்றி துஷ்யந்தன் ...

பல இடங்களிலும் வலம் வருகின்றது. குறிப்பாக 'முருகா என்றழைத்தாலே உருகாதோ என் மனம்', கார்த்திகையில் வந்துதித்த' போன்ற பாடல்களும் பிரசித்தம் பெற்றவையாகும். இவருடைய சகோதரரான ஜீவாவும் மிகச் சிறந்ததொரு பாடலாசிரியர் ஆவார்.

பக்திப் பாடல்கள் தவிர்ந்து பொதுவான பாடல்கள், சமூக விழிப்புணர்வு சார்ந்த பாடல்களெனவும் பல பொதுவான பாடல்களையும் எழுதியிருக்கக் கூடிய றஜித்தின் பாடல்கள் எதுகை மோனைகள் இழையோட சந்தங்களோடு மிக அழகாக எப்போதும் பலரையும் கவரும் படியாக அமைந்து விடுவதுண்டு.

ஈழத்துக் குறும்படத் துறையில் தனது வகிபாகத்தைக் காட்டியிருக்கக் கூடிய றஜித் அவர்கள் 2012ஆம் ஆண்டிலேயே ஒரு நடிகராக குறும்படத் துறைக்குள் நுழைந்து நடிப்பு, இசை, இயக்கம் என 20ற்கும் மேற்பட்ட குறும் படங்களில் பங்காற்றியுள்ளார். இலவு, பயங்கரம், 1929 போன்ற படைப்புக்கள் இவற்றுள் முக்கியமானவை. ஈழபக்திப் பாடற் தளத்தில் கணிசமான பங்களிப்பை மேற்கொண்டிருக்கக் கூடிய றஜித் பாடல்கள், இதர படைப்பு சார் முயற்சிகள் எல்லாம் இவரது அயராத முயற்சியின் வெளிப்பாட்டின் காரணமாகவே இற்றை வரை இவருக்கான ஒரு தள அந்தஸ்தை வழங்கியிருக்கின்றது என சொல்லப் போனால் மிகையாகாது. இவருடைய கலைப் பயணம் இன்னுமின்னுமாய் தொடர்ந்து இன்னும் பல படைப்புக்கள் வெளி வர வேண்டும்.

போராடிய மண்ணில் வோரோடிய காதல் 'கார்குழலி' கலைத்துவ படைப்பு...

எங்கள் படைப்புக்களும், எங்கள் கலைஞர்களும் இன்று மாத்திரமல்ல அன்று தொட்டே உலகப் பரப்பில் கொண்டாடப்பட்டுக் கொண்டே வந்திருக்கின்றார்கள். ஆயினும் கால நேரச் சூழல் காரணமாய் அண்மிய ஆண்டுகளாய் எங்கள் கலைஞர்களின் வித்தியாசமான சிந்தனைப் படைப்புக்கள் பார்ப்போரை அப்படியே கட்டி போட்டு விடக் கூடியனவாய் அமையப் பெற்று விடுகின்றன. அப்படியானதொரு வெளியில் தான் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகி பார்ப்பவர்கள் அனைவரையும் ஒரு காலத்திற்குள் கொண்டு சென்றிருக்கின்றது. 'கார்குழலி' என்னும் பாடல் கே.எம். புரொடக்ஷன் தயாரிப்பில் வெளியாகியுள்ளது.

'கார்குழலி' உண்மையில் இந்தப் பெயரை கண்ணுறுகின்ற போதே பல நினைவுகள் நம்மிடையே வந்து போவதைத் தவிர்க்கப்பட முடியவில்லை. எங்களுடைய வாழ்வியலிலே நாம் தொலைத்தது ஏராளம். எங்கள் மண்கண்ட அசாதாரண சூழலில் தான் எங்கள் வாழ்வு மின்னியது என்பது தான் வெளிப்படை. அப்படியாகத் தொலைந்த பலவற்றில் பல சொல்ல முடியாக் காதல்கள் ஏராளம். முடிவை எட்ட முடியாக் காதல்களும் தாராளம்.

'கார்குழலி' பாடலும் அப்படித் தான். இழந்தவற்றை அற்புதமாகக் காட்டியிருக்கின்றது.

பாடலாசிரியர் குவேயின் வரிகள் உண்மையிலேயே நம்மை ஒரு கால வாழ்விற்குள் கொண்டு செல்கின்றது. அருமையாகவும் அமைந்திருக்கின்றது எனலாம்.

பாடலின் தன்மைக்கேற்ற பாடலை அருமையாக இசையமைத்துப் பாடியிருக்கின்றார் இசையமைப்பாளர் பத்மயன் சிவா. முழுமையாக பாடலை வேறு தளத்திற்கு நகர்த்தியிருக்கின்ற அவரது முயற்சி பாராட்டத்தக்கது. இணைந்து குரல் கொடுத்திருக்கின்ற பைரவியின் குரலும் நன்றாக அமைந்திருக்கின்றது.

பாடலின் ஆடியோ எப்படி வெளிப்படுத்தியிருக்கின்றது என்பதற்கு அப்பால் இந்தப்பாடலின் காண்பிய அமைப்பிற்கு முதலில் சல்யூட் செய்யப்பட வேண்டும். அந்த வகையில் பாடலை இயக்கியிருக்கும் கதிர் உண்மையில் பாராட்டத்தக்கவர்.

பாடலாசிரியரினதும், தயாரிப்பாளரினதும் சிந்தனைக்கு வண்ணம் கொடுத்து பாடலை அழகாக்கியிருக்கின்றார். இந்தப் பாடலில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அரிக்கன் லாம்பு வாழ்வு, யுத்தக் காதல் கடிதங்கள், பழைய தொலைக்காட்சி பார்க்கும் நினைவுகள் என பலவற்றை மீள நினைவுபடுத்தியிருக்கின்றனர் பாடல் குழுவினர்.

திரையில் தோன்றி பாடலை அழகு படுத்தியிருக்கும் மதிசுதா மற்றும் கீர்த்தி ஆகியோர் எங்கள் மண்ணின் பல முகங்களை பிரதிபலித்துள்ளனர். படைப்புக்களைத் தேர்ந்து அவற்றில் பணியாற்றும் நடிகரும் இயக்குனருமாகிய மதிசுதா இயல்பாக கதாநாயகி கீர்த்தியுடன் தனது நேசத்தை முகத்தில் வெளிப்படுத்தும் பாங்கு சிறப்பு.

அண்மிய நாட்களாய் எங்கள் பிள்ளைகளின் படைப்புக்கள் நல்லதொரு வெளிப்பாட்டைக் காட்டி நிற்கக் கூடிய வெளியில் 'கார்குழலி' பாடல் பல பழமையான விடயங்களையும், மறக்கவியலா பல நினைவுகளையும் மீள நினைவுபடுத்தி தனித்துத் தெரியும் படைப்பாக மிளிர்கின்றது என்பதில் எதுவித ஐயமுமில்லை.

வெற்றி துஷ்யந்தன் ...

சமூகப் பார்வை

வோரோடியுள்ள கொலைகளும், தற்கொலைகளும்

போராடிய மண்ணில் இன்று வோரோடியுள்ளது கொலைகளும், தற்கொலைகளுமாகும். கொலை, தற்கொலை இச்சொற்கள் இரு வேறு அர்த்தங்களைக் கொடுத்தாலும் மனிதனின் மரணமே அச்சொற்களின் இறுதியாக பொருள்படுகிறது. ஏன் கொலை, எதற்கு தற்கொலை என்ற இரு கேள்விகளுக்கும் பதிலைத் தேடிக்கொள்ள முடியாமலுள்ளது. கொலை என்பது ஒரு மனிதன் இன்னொரு மனிதனை கொல்வது அல்லது மரணமடையச் செய்வதாகும். ஏன் ஒரு மனிதனை இன்னொரு மனிதன் கொலை செய்கிறான். கோபம் அல்லது குரோதம் அல்லது பரம்பரை பகை, போதை, போர் போன்றவற்றால் நிகழ்வதாகும். ஆனால் நாம் மேலே குறிப்பிட்ட போர் முடிந்துவிட்டது. ஆதலால் போரினால் கொல்லப்படும் சம்பவங்கள் இல்லை. அப்படியாயின் ஏன் வடபுலத்தில் இன்னும் கொலைகள் நடக்கின்றன. இறுக்கமான கட்டுப்பாடுகள் தளர்ந்ததால் இறுக்கிக் கட்டிவைத்திருந்த குரோதங்களும், கோபங்களும் தலைவிரித்தாடுவதாகவே நோக்க வேண்டியுள்ளது. அத்தோடு போதையும் கலந்துள்ளதால் கட்டுக்கடங்காத நிலையை அடைந்துள்ளது. அடுத்தது தற்கொலை, ஒருவர் தன்னைத்தானே கொலை செய்து கொள்ளும் செயலாகும். மன அழுத்தம், மனப்பித்து, ஆளுமைச் சிதைவு என்று காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். வடபுலத்தை நாம் உற்று நோக்கினால் கலாசாரம், கல்வி, பண்பாடு என்று உலகமே

வியக்கும் வகையில் வாழ்ந்த மக்கள் சமூகத்தினர். ஆனால் இன்று அவை இருந்தாலும் வெளியில் குற்றங்களும் கொடூரங்களுமே தென்படுகின்றன. முல்லைத்தீவில் தற்கொலைச் சம்பவங்கள் அண்மையில் வெகுவாக அதிகரித்துள்ளன. போருக்குப் பின்னரான கால மாற்றங்களை எமது மக்களால் புரிந்துகொள்ள முடியாத நிலையும் கட்டமைப்பு ரீதியாக ஒன்றும் சீராக செய்யப்படாததால் சமூக ஏற்றத் தாழ்வுகளும், பிறப்புகளும் அதிகரித்துள்ளன.

மற்றையது வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கும் பாமர மக்களின் மனப்பாங்கு மாற்றங்களும் இவற்றுக்கு தூண்டுதல் காரணங்களாகக் காணப்படுகின்றன.

அத்தோடு போர் சூழ்நிலையில் வாழ்ந்த மக்களின் மனங்களில் இன்னும் அந்த போர் ரணங்களும் விட்டு மறையாத சூழ்நிலையில் கஷ்டங்கள், பிரச்சினைகளும் அம்மக்களின் மனதில் பெரும் பாரமாக உருவெடுத்து தற்கொலைகளுக்கு தூண்டுகோளாக அமைந்து விடுகிறது.உலகில் மிகவும் கொடுமையான தும்பியல் குறியீடுகள் என்றால் பசியும், வறுமையும்தான். முல்லைத்தீவில் வறுமையில் வாடும் மக்கள் அதிகமானோர் உள்ளனர். வறுமையை போக்க மேலும் இதர பல காரணிகளில் சிக்கி தவிக்கும் இளம் வயதினர் அதீத மன அழுத்தத்தால் இவ்வாறான முடிவுகளுக்கு ஆளாகின்றனர். இவற்றுக்கான காரணங்களை சொல்வதென்றால் அடுக்கிக் கொண்டே போகலாம்.

காரணங்களைச் சொல்லிப் பலனில்லை என்பதால், இவற்றுக்கு நாம் கொடுக்கும் தீர்வும், நிறுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய்வதோடு இந்த சமூக பிரச்சினையை ஒரு பகுதியினருக்கு மட்டும் பாரப்படுத்திவிட்டு நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சமூகத்தில் வாழும் நாம் ஒவ்வொருவரும் சிந்தித்து தனி மனிதனாக என்ன என்ன செய்ய முடியும் என்பதை மனதில் கொண்டு என் சமூகத்திற்கு என் உடன் பிறப்புக்கு எம் இனத்துக்கு ஏதோ ஒன்று செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை ஆழமாக மனதில் கொண்டு நாம் ஒவ்வொருவரும் தனி ஆளாக இதைச் செய்ய முற்பட்டால் ஒவ்வொரு தனி மனிதனின் செயற்பாடும் சேரும் போது இப் பிரச்சினைக்கு எளிதான தீர்வை பெற்றுக் கொடுக்கலாம் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

ஸ்ரீ ...

ஹம்பாந்தோட்டை மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளில் 42 கிராம அபிவிருத்தி திட்டங்கள்

(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

கிராமிய அபிவிருத்தி திட்டத்திற்கு ஒன்றிணைந்ததாக ஹம்பாந்தோட்டை மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் 42 கிராமிய அபிவிருத்தி திட்டங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் கௌஸல்யா கலப்பத்தி (20) தெரிவித்தார். இதுபற்றி அவர் தெரிவித்ததாவது,

முப்பது கிராம சேவகர் பிரிவுகளில் இத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. அந்தந்த கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்களின் தேவை மற்றும் பிரேணைகளுக்கு ஏற்ப, கிராமத்திற்குத் தேவையான அத்தியாவசிய மற்றும் பொதுத் தேவைகள் அபிவிருத்தி திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இவ் அபிவிருத்தி திட்டங்களில் கிராமிய மக்களும் முன்னின்று உழைத்து தங்களது பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர்.

இத் திட்டங்களினூடாக கிரமிய பாதைகளுக்கு கொன்கிறீட் கல் பதித்தல், ஜூல்கமுவ கிராமத்தின் கிராமிய சுகாதார நிலையததை புனருத்தாரணம் செய்தல், சிரிபோபுர சுதேச விற்பனை நிலையத்தை நிர்மாணித்தல், பெத்தவலை குளத்தை புனருத்தாரணம் செய்தல் மற்றும் பதலாயகம குடிநீர் திட்டத்தை நிர்மாணித்தல் போன்ற 42 கிராமிய அபிவிருத்தி திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டள்ளன.

இத் திட்டங்களுக்கு இரண்டு மில்லியன் ரூபாய்களுக்கு கூடுதலான தொகை செலவிடப்பட்டுள்ளது.

இதற்கென கிரா மக்களின் பங்களிப்புக்களும் கிடைத்துள்ளன. மேலும் அரசாங்கம் இதற்கென 60 மில்லியன் ரூபா செலவிட்டதாகவும் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

நீர்த் தாங்கியில் விழுந்து 2 வயதுச் சிறுவன் பலி

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

ஹொரவபொத்தான பகுதி வீடொன்றில் இரண்டு வயது சிறுவனொருவர் நீர்தாங்கியில் விழுந்து பரிதாபகரமான முறையில் உயிரிழந்தாக ஹொரவபொத்தான பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் (19) நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் ஹொரவபொத்தானை இஹலகுபுக்கொள்ளாவ பகுதி வீடொன்றில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில்,ஹொரவபொத்தானை இஹலகுபுகொள்ளாவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட முஹமட் அஸ்மீன் எனும் இரண்டு வயது சிறுவனே உயிரிழந்தார்.

பீடியைப் பற்றவைக்கையில் வீட்டில் தீப்பிடிப்பு 63 வயதுடைய உரிமையாளர் பரிதாப மரணம்

(புத்தளம் தினகரன் விசேட நிருபர்)

கல்லடி பிரதேசத்திலுள்ள வீடொன்றில் திடீரென ஏற்பட்ட தீயினால், அந்த வீட்டில் வசித்து வந்த 63 வயதுடைய பரமசிவன் என்பவர் உயிரிழந்தார்.உயிழந்த நபர் தனது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைளுடன் குறித்த வீட்டில் வாழ்ந்து வந்துள்ளார். தீ ஏற்பட்ட வேளையில், வீட்டில் வேறு எவரும் இருக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த நபர் பீடி புகைப்பவர் என்றும், பீடி புகைப்தற்காக நெருப்புக் குச்சியை பற்றவைத்த போது இந்தத் தீ ஏற்பட்டிருக்கலாமென்று நம்புவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.ரேத பரிசோதனையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7 வது பிரிவின் கீழ் அறிவிப்பு

எனது குறிப்பு எண்: ஸ்ரீஜயா/இ/அ/74/ RD II

இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருவதாவது 07.05.2021 ஆம் திகதி பிரதேச செயலாளர் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் உள்ள கீழ் வரும் காணிகளின் உரிமம் மற்றும் நஷ்டஈட்டு விசாரணைகள் காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 09 இன் கீழ் அதனுடன் சம்பந்தப்பட்ட என்னால் அரச உரிமத்தின் கீழ் என்னால் நடத்தப்படும் என்பதை தெரிவிப்பதுடன் அக்காணியில் யாருக்காவது - அக்கறை இருப்பின் குறிப்பிட்ட விசாரணைக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றது. மேலதிக தகவல்களுக்காக 08.04.2021 ஆம் திகதியிட்ட 2222/48 இலக்கமிடப்பட்ட விசேட வர்த்தமானியை பார்க்கவும்.

அட்டவணை

மாகாணம்	- மேற்கு
மாவட்டம்	- கொழும்பு
பிரதேச செயலாளர் பிரிவு	- ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
கிராம நிலதாரி பிரிவு	- இல 514 - வெலிகட கிழக்கு மற்றும் இல. 514 A - வெலிகட மேற்கு
கிராமங்களின் பெயர்	- வெலிகட, யக்பெட்ட
நிலைமை	- ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை நகராட்சி மன்றத்தின் எல்லைக்குள்
பூர்வாங்க திட்ட இல	- கொ.9917
மொத்த துண்டு இல	- துண்டு இல 01 முதல் 40 வரை
நீளம்	- 3.9786 ஹெக்டயர்

கசுன் எபா செனவிரத்ன
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை

பிரதேச செயலகம்
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
19.04.2021

காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல.28இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல: இ/இ/07/31/12-(III)

காணி அமைச்சின் குறிப்பு இல: 4-3/6/2017/HW/526

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 16.03.2021ஆம் திகதிய 2219/32 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை

மாகாணம்	: மேல்
மாவட்டம்	: களுத்துறை
பிரதேச செயலாளர் பிரிவு	: இங்கிரிய
கிராம நிலதாரி பிரிவு	: இல. 621 மபுடுகலை மற்றும் இல.622 பெல்பிடிகொட
கிராமத்தின் பெயர்	: மாபுடுகலை, பெல்பிடிகொட, பஹுருதொட
ஆரம்ப வரைபட இலக்கம்	: ஆ.வ.க. 4813
துண்டு இலக்கம்	: 01-184
விஸ்தீரணம்	: 13.6165 ஹெக்டயார்

பிரதேச செயலாளர் மற்றும் சுவீகரித்தல் அதிகாரி,
இங்கிரிய.

பிரதேச செயலாளர் கரியாலயம்,
இங்கிரிய.
2021-04-19.

விலைமனுக்களுக்கான அழைப்பு

கைத்தொழில் அமைச்சு

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

2021-2022ஆம் வருடங்களில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்

கேள்வி இல. LMSL/SUP/PR/2021/63

மேற்குறிப்பிடப்பட்ட சேவையை வழங்குவதற்கு ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட ஜெனிட்டோரியல் சேவை வழங்குநர்களிடமிருந்து இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் கேள்விகளை அழைக்கின்றது.

விதிகள் மற்றும் நிபந்தனைகள், விபரக்குறிப்புகள் மற்றும் ஏனைய விபரங்களை எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2021-05-05ஆம் திகதி அல்லது அதற்கு முன் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு தொகுதி கேள்வி ஆவணங்களுக்காக மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா கட்டணம் அறவிடப்படும். கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சகல கேள்விப் படிவங்களுடனும் 10,000.00 கேள்விப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப் படிவங்களை 2021-05-06ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், இல. 341/21, சரண மாவத்தை, இராஜகிரிய எனும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

கேள்விகள் 2021-05-06ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்குப் பின் சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2882025, 011-2883953 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,
இல. 341/21, சரண மாவத்தை,
இராஜகிரிய

பெறுகை அறிவித்தல்

Credit No.: IDA 63460

ஊவா மாகாணத்தின் மொனராகல மாவட்டத்தில் மஹரகம நீர்வீழ்ச்சி அடுக்கை பிரதேசத்தில் 01 ஆம் இலக்க அணைக்கட்டு மற்றும் கால்வாய்களின் புனர்நிர்மாணம்

காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

கமத்தொழில் அமைச்சு

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து 125 மில்லியன் அ.ஐ. டொலர்களை பலவிதமான நாணயங்களில் விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் ஆகுசெலவிற்காக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை மொனராகல மாவட்டத்தில் மஹரகம நீர்வீழ்ச்சி அடுக்கையில் 01 ஆம் இலக்க அணைக்கட்டு மற்றும் கால்வாய் முறைமையின் புனர்நிர்மாணம் என்ற ஒப்பந்தத்தின் கீழ் தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

2. மொனராகல மாவட்டத்தின் மஹரகம நீர்வீழ்ச்சி அடுக்கையிலுள்ள பின்வரும் அணைக்கட்டின் புனர்நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து CSIAP செயற்றிட்டத்தின் சார்பாக, ஊவா மாகாண கௌரவ ஆளுநரினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவானது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார். விபரங்கள் பின்வருமாறு:

ஒப்பந்த இல.	வேலைகளின் விளக்கம்	பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சிவில் ஆகுசெலவு (மில்)	ஒப்பந்தக் காலப்பகுதி	தேவைப்படும் தரம்	தேவைப்படும் விலைமனுப்பிணை	
					விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்)	செல்லுபடியாகும் காலப்பகுதி
LKA-MOA-226991-CW-RFB	வெல்லவாய மஹரகமவில் 01 ஆம் இலக்க அணைக்கட்டின் புனர்நிர்மாணம்	16.8	40 வாரங்கள்	சி-6 அல்லது மேற்பட்டது – நீர்ப்பாசனம் மற்றும் கால்வாயின் வடிகாலமைப்பு	357,000.00	2021 ஜூலை 21 ஆம் திகதி வரையும்.

3. விலைமனுதாரர் மேலேயுள்ள வேலைகளுக்கு மேலேயுள்ள விலைமனுப்பிணையுடன் 2021 ஜூலை 21 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளவாறு விலைமனுக்கோரல்களை சமர்ப்பிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளனர். ஒப்பந்தத்தை பெறுவதற்காக வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய்களின் வடிகாலமைப்பில் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் **(CIDA)** பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

4. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.

5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பதுளை, இரத்வத்த மாவத்தை, மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திடமிருந்து பெற்று, (தொலைபேசி: 055-2222311, தொலைநகல்: 055-2222311, மின்னஞ்சல்: ceirrigationuva@yahoo.com) எந்தவொரு வேலை நாளிலும் அதே இடத்தில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

6. 2021 ஏப்ரல் 21 ஆம் திகதியிலிருந்து 2021 மே 17 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், பதுளை, இரத்வத்த மாவத்தை, மாகாண நீர்ப்பாசன திணைக்களம், மாகாண நீர்ப்பாசன பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7. 2021 மே 18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பதுளை, இரத்வத்த மாவத்தை, மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் 2021 மே 18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு குறிப்பிட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 2021 ஜூலை 21 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இரு தபாலுறைகளும் இன்னொரு தனியான தபாலுறையில் சேர்க்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் **Rehabilitation of Anicut No.01 at Maharagama cascade area"** என குறிப்பிடப்படல் வேண்டும்.

தலைவர்/ பிரதான செயலாளர்,
ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநரினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,
ஊவா மாகாண சபை.

திகதி: 21.04.2021.

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்காக வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

மத்திய மாகாணம் - 01 - ஏப்ரல் 2020

மின் பொறியியலாளர் பிரதேசம் - தம்புள்ளை

வாடிக்கையாளர் சேவை நிலையம் - தம்புள்ளை

2021-04-20 08:00-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
விநியோகம் : சீகிரியா புதிய மியூசியம் திட்டம்

வாடிக்கையாளர் சேவை நிலையம் - தம்புள்ளை

2021-04-22 08:30-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
விநியோகம் : சில்வத்கம, வெட்டையா, குடவேவா, முகலனியா, தலகிரியகம புதிய, மகுல்கொல்லா, மாலவியகம, மீவலபதி, யதிகல்போட்டா, மொராகஹவேலா நிலம், யதிகல்போட்டா மீகஹேஹனா

2021-04-24 08:00-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
விநியோகம் : நிகவடவன அருனொடயகம, வெலன்கொல்ல - 2, வெவல வெலன்கொல்ல , அலகொலவெவ, கோரடியாய திட்டம், வெவலவெவ தம்புலுவேடிய, கோன்கஹமுல, நிகவடவன சந்தி, "ஹம்பசஸ்கமுவ, வெவலவெவ, வெவலவெவ இஹெலயாய திட்டம், வெவலவெவ வஹகொட்டெயாய திட்டம்

2021-04-29 08:00-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
மொத்த :
சி.ஐ.சி டைரிஸ் (பிரைவேட்) லிமிடெட், தம்புள்ள ஹோட்டல் ரிசார்ட் மற்றும் கன்ட்ரி கிளப், பனி தொழிற்சாலை, தம்புள்ள கிரிக்கெட் மைதானம், மாலிபன் டெய்ரி (பிரைவேட்) லிமிடெட், வெப்பமண்டல கிராம ரிசார்ட்
விநியோகம் :
மிரிஹெலா அரிசி ஆலை, போஹோரன்வே நர்சரி, ஜன உதனகம (இபன்காட்டு), கிரிவால்ஹின்னகம நீர் திட்டம், போஹரன்வேவா திட்டம், தலகிரியகம, தென்னகூன்புரா - 2, இபன்கட்டுவா பாலம், புதிய துணை மின்நிலையம் தலகிரியகம, இடன்லோலுவட்ட மாலிகதென்ன, தென்னகூன்புரா - 1

வாடிக்கையாளர் சேவை நிலையம் - நாவுலை

2021-04-22 08:30-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
விநியோகம் : நயகும்புர, வட்டெகம்மெண்ட - i (அதுபண்டியாவ)

2021-04-28 08:30-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
மொத்த :
தலகஹகொடுவ (ராஜ்ஜம்மன), தொழிற்துறைகளின் படம் (தனியார்) நிறுவனம்.
விநியோகம் : நாகல காலனி, ராஜமல் உயன, ஓபல்கல , சென்கம, அகரஹடுவ மேடை - II, அண்டவல, அகரஹடுவ, அண்டவல லிஹினிபிடிய, குபலொலுவ ஜே.சி. அண்டவல (முகலன்யாய), ராஜ்ஜம்மன நீர் வழங்கல், ஓபல்கல வட்டா

வாடிக்கையாளர் சேவை நிலையம் - பல்லேபொளை

2021-04-23 09:00-17:00
மின் தடைப்படும் இடங்கள்
சியபலககவேலா ஆர்.இ., வாககோட்டே ஆர். இ., டயலொக் டவர் லெனாவாலா, மேடபெட்டா, வாககோட்டே - படலாயா

2021-04-27 09:00-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
விநியோகம் : டயலொக் டவர் லெனாவாலா

மின் பொறியியலாளர் பிரதேசம் - கலகெதர

வாடிக்கையாளர் சேவை நிலையம் - கத்தராலியட்டை

2021-04-20 09:00-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
விநியோகம் : சங்கராஜபுர, பொகஸின்ன, வெலிவிட பஹலகம

வாடிக்கையாளர் சேவை நிலையம் - நுகவெலை

2021-04-23 09:00-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
மொத்த : டயலொக் டெலிகொம் குலுகம்மன
விநியோகம் :
துல்வல, அப்-துல்வல (ஜெயம்பதி வீதி), குலுகம்மன, குலுகம்மன சந்தி

மின் பொறியியலாளர் பிரதேசம் - கண்டி நகரம்

வாடிக்கையாளர் சேவை நிலையம் - மத்தி

2021-04-16 11:15-19:15
மின் தடைப்படும் இடங்கள் :
மொத்த மற்றும் விநியோகம் : கால் லிங்க்

2021-04-16 13:30-21:30
மின் தடைப்படும் இடங்கள் :
மொத்த மற்றும் விநியோகம் : கால் லிங்க்

2021-04-16 16:20-00:20
மின் தடைப்படும் இடங்கள் :
மொத்த மற்றும் விநியோகம் : கால் லிங்க்

வாடிக்கையாளர் சேவை நிலையம் - தெற்கு

2021-04-16 08:40-16:40
மின் தடைப்படும் இடங்கள் :
விநியோகம் : உத பெரதேனியா

மின் பொறியியலாளர் பிரதேசம் - கட்டுகஸ்தோட்டை

வாடிக்கையாளர் சேவை நிலையம் - அக்குரணை

2021-04-23 09:00-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
விநியோகம் :
அகுரான பிரதேசியாசபா, அலவதகுட (பாலகடுவா), அலவதகுட ii (தபால் நிலையம் அருகில்), அலவதுகொட - நான் (எம்.பி.சி.எஸ்)

2021-04-24 08:30-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
மொத்த : சென்ட்ரல் சா மில், பலனகலா நீர் வழங்கல் (கல்வி. அலுவலகம்-கேட்.)
மொத்த மற்றும் விநியோகம் : ஜனக சா ஆலை, குலுகம்மன நீர் பம்ப்
விநியோகம் : 4 வது மைல் இடுகை (அம்பத்தென்னா), அம்படென்னா பஜார், கஹல்லா - i, மெகோடகம - i, பொல்லகொட, அக்கரா 22, கஹல்லா - ii, குகல சந்தி, மெகோடகம - ii (பதிகியா)

2021-04-27 08:30-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
விநியோகம் :
அஸ்வேதுமா, டெல்காஸ்டென்னா சந்தி, குருகோடா - நான் (மலகடே), குருகோடா ii (மைதானம்), 8 வது மைல் இடுகை (மொராட்டு), தேலம்புகஹவத்தா

2021-04-27 09:00-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
விநியோகம் :
தேலம்புகஹவத்தா, 8 வது மைல் இடுகை (மொராட்டு), டெல்காஸ்டென்னா சந்தி, குருகோடா - நான் (மலகடே), குருகோடா ii (மைதானம்), அஸ்வேதுமா

2021-04-29 09:00-17:00
மின் தடைப்படும் இடங்கள் :
விநியோகம் : புலுகஹடென்னா

